ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

நம்பெருமாள் விஜயம்

(மலர் – 11) Dec 2007

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

“ஸ்ரீ அஹோபில தாஸன்” க. ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப் பொருள்கள் முன்னமே கைக் கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப் பொருளும் கொண்டாரே.

உட்பொதிவு

1. ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்
2. ஸ்ரீபாஷ்யம்
3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்
4. முமுக்ஷுப்படி
5. சிறிய திருமடல்
6. திருமாலை

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

ஸ்ரீரங்கராஜஸ்தவம்
(பகுதி – 11)

101. விலஸதி நாஸா கல்பகவல்லீ முக்தா இவ ரங்கநிலயஸ்ய
ஸ்மிதம் அபி தத் நவகுஸுமம் சுபுக கபோலம் ச பல்லவ உல்லஸிதம்

பொருள் – (திருநாசி, புன்னகை, தாடை, கபோலம் ஆகியவற்றைக் கூறுகிறார்) பெரியபெருமாளின் திருநாசியானது (மூக்கு) அழகான கற்பகக் கொடி போன்று உள்ளது. அவனுடைய புன்னகையானது அந்தக் கொடியில் மலர்ந்துள்ள மலர் போன்றுள்ளது. அவனது தாடையும் கபோலங்களும் அந்தக் கொடியில் உள்ள தளிர்கள் போன்று உள்ளன.

102. நயந சபர வித்தௌ கர்ண பாச அவருத்தௌ
ருஷ இவ லுடத: அர்ச்சிர் மஞ்ஜரீ: உத்கிரந்தௌ
பரிமிலத் அலக ஆலீ சைவலாம் அம்ஸவேலாம்
அனு மணி மகர உத்கௌ ரங்கதுர்ய அம்ருத அப்தே:

பொருள் – (திருச்செவிகளில் உள்ள மகர குழைகளைப் பற்றிக் கூறுகிறார்) பெரியபெருமாளின் திருமேனியானது ஒரு பெரிய கடல் போன்று உள்ளது. அந்தக் கடலின் கரைகள் போன்று அழகான அவனது திருத்தோள்கள் உள்ளன. அந்தக் கரைகளில் உள்ள பாசி போன்று அவனது அழகான கறுத்த கேசங்கள் உள்ளன. இவனது திருச்செவிகளில் உள்ள, சிறந்த மணிகளால் பதிக்கப்பெற்ற மகரக்குழைகள் இரண்டும் தகதகவென்று ஒளியுடன் காணப்படுகின்றன. இவை ஏன் இவ்விதம் சிவந்து, ஒளியைக் கக்கியபடி உள்ளன என்றால் – இந்த இரண்டு சுறாமீன்களையும், கண்கள் என்னும் மீன்கள் ஒரு பக்கம் தாக்கியபடி உள்ளன, மற்றொரு பக்கம் இவை திருச்செவி என்னும் வலைகளில் அகப்பட்ட நிலையில் உள்ளன – ஆகவே கோபத்துடன் இவ்விதம் உள்ளன என்று கருத்து.

103. அதர மதுர அம்போஜம் தத் கர்ணபாச ம்ருணாளிகா
வலயம் அபி மாம் ஆஸ்தாம் ரங்கேந்து வக்த்ர ஸர: சிரம்
நயந சபரம் நாஸா சைவால வல்லரி கர்ணிகா
மகரம் அலகச்ரேணீ பர்யந்த நீல வந ஆவலி

பொருள் – (திருமுகத்தை ஒரு ஏரி என வர்ணிக்கிறார்) அழகாகச் சிவந்த உதடுகள் என்னும் அப்போது மலர்ந்த தாமரை உள்ளது. திருச்செவிகள் என்னும் தாமரை மலரின் கொடி வளையம் உள்ளன. திருக்கண்கள் என்னும் மீன்கள் கொண்டதாக உள்ளது. திருமூக்கு என்னும் பாசிக்கொடி படர்ந்து உள்ளது. கர்ணபூஷணம் என்னும் மகர மீன்கள் உள்ளன. அடர்ந்த கரிய கேசங்கள் என்னும் கறுத்த சோலைகள் சூழ்ந்து உள்ளது. இப்படியாக பெரியபெருமாளின் திருமுகமானது ஒரு ஏரி போன்று உள்ளது. இந்தத் திருமுகம் நீண்ட நாட்கள் என்னைப் பார்த்தபடி இருத்தல் வேண்டும்.

104. ரமயது ஸ மாம் கண்ட்ட: ஸ்ரீரங்கநேது: உதஞ்சித
க்ரமுக தருண க்ரீவா கம்பு ப்ரலம்ப மலிம்லுச:
ப்ரணய விலகத் லக்ஷ்மீ விச்வம்பரா கர கந்தலீ
கநக வலய க்ரீடாஸங்க்ராந்த ரேக: இவ உல்லஸத்

பொருள் – (திருக்கழுத்தை வர்ணிக்கிறார்) பெரியபெருமாளின் திருக்கழுத்தானது பாக்கு மரம் போன்றும், சங்கு பொண்ட்ரும் உள்ளது. அந்தக் கழுத்தின் அழகைக் கொள்ளையடித்தது எது தெரியுமா? அவனை மிகவும் அன்புடன் அணைத்துக்கொள்ளும் மஹாலக்ஷ்மி, பூமிப்பிராட்டி ஆகியவர்களின் வாழத்தண்டு போன்ற அழகான கைகளில் உள்ள பொன்வளையல்கள், இவனது அழகான கழுத்தில் அழுந்தின போலும். அந்த வளையல்களில் அடையாளங்களே இவன் கழுத்தை விட அழகான, அந்தக் கழுத்தில் உள்ள மூன்று மடிப்புகளான ரேகைகள் போலும். ஆக கழுத்தின் அழகை இந்த ரேகைகள் கொள்ளை கொண்டன. இப்படியாக சிறந்து விளங்கும் அவனது திருக்கழுத்து எனக்கு மகிழ்வை அளிக்கவேண்டும்.

105. அதிஷ்ட்டாந ஸ்தம்பௌ புவந ப்ருது யந்த்ரஸ்ய கமலா
கரேணோ: ஆலாநே அரி கரி கடா உந்மாத முஸலௌ
ப்பணீந்த்ர ஸ்ப்பீத ஸ்ரக் வ்யதிகரித ஸங்கித விபௌ
புஜௌ மே பூயாஸ்தம் அபயம் அபி ரங்கப்ரணயிந:

பொருள் – (பெரியபெருமாளின் திருப்புஜங்களை வர்ணிக்கிறார்) இந்த உலகத்தை ஒரு பெரிய யந்த்ரம் என்று வைத்துக் கொண்டால், அந்த யந்த்ரத்திற்கான ஆதாரத் தூண்களாக உள்ளது, ஸ்ரீரங்கநாச்சியார் என்னும் பெண் யானையைக் கட்டிப் போட உதவும் கட்டுத்தறியாக உள்ளது, அடியார்களின் விரோதிகள் என்னும் யானைக்கூட்டத்தை அழிக்கவல்ல உலக்கை போன்று உள்ளன, ஆதிசேஷனின் திருமேனி எது, இவன் அணிந்துள்ள மாலை எது, இவனது திருக்கரங்கள் எது என்று அறிய இயலாதபடி பருத்து உள்ளது – இப்படியாக உள்ள பெரியபெருமாளின் புஜங்கள் எனக்கு அபயம் அளிக்கவல்லவையாக உள்ளன.

106. ப்ரதி ஜலதித: வேலாசய்யாம் விபீஷண கௌதுகாத்
புந: இவ புரஸ்கர்த்தும் ஸ்ரீரங்கிண: ப்பணி புங்கவே
ஸமுபததத: கஞ்சித் கஞ்சித் ப்ரஸாரயத: புஜ
த்வயம் அபி ஸதா தாந ச்ரத்தாளு தீர்க்கம் உபாஸ்மஹே

பொருள் – (பெரியபெருமாளின் திருக்கரங்களை வர்ணிக்கிறார்) முன்பு கடற்கரையில் சயனித்தருளிய நிலைமை, விபீஷணனின் ஆவல் காரணமாக பெரியபெருமாளுக்கு மீண்டும் நினைவுக்கு வந்தது போலும். அதனாலேயே ஆதிசேஷன் மீது, தன்னுடைய ஒரு திருக்கரத்தை மடித்துத் தலையணையாக வைத்துக்கொண்டும், மற்றொரு திருக்கரத்தை நீட்டியபடியும் சயனித்துள்ளான். மிகவும் நீண்டதும், தானம் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டதும் ஆகிய பெரியபெருமாளின் இரண்டு திருக்கரங்களையும் நாம் எப்போதும் சிந்திப்போமாக.

107. குஸூமபர அலஸௌ ஸ்ப்படிக வேதி சயௌ விடபௌ
அமரதரோ: பரம் பரிஹஸந் ப்ருது ரங்கபுஜ:
பஹூ மணி முத்ரிகா கநக கங்கண தோர்வலயை:
கிஸலயி தோர்த்வயம் ப்பணிநி நிர்ப்ரஸூப்தம் இம:

பொருள் – (பெரியபெருமாளின் திருப்புஜங்களை வர்ணிக்கிறார்) தேவலோகத்தில் உள்ள கற்பகக் கிளைகள், மலர்களால் நிரப்பப்பட்டு, அங்குள்ள ஸ்படிக மணிகளின் மீது சாய்ந்தபடி உள்ளன. இவற்றைப் பரிகாசம் செய்யும் விதமாக உள்ளது எது தெரியுமா? ஸ்படிக மணிக்கு மேலான ஆதிசேஷனின் திருமேனியில் சாய்ந்துள்ளது, கற்பக மலர்களை விட மிகவும் உயர்ந்த இரத்தினக்கற்கள் பல பதிக்கப்பட்ட, பொன்மயமான கைவளை, தோள்வளை சூடியுள்ளது, அந்தக் கற்பக மரத்தின் கிளைகளைக் காட்டிலும் பருத்து உள்ளது – இது எது என்றால் – பெரியபெருமாளின் இரண்டு புஜங்களாகும். அந்தப் புஜங்களை நாம் அண்டி நிற்போமாக.

108. மத் ரக்ஷாவ்ரத கௌதுகே ஸூகடகே விக்ராந்தி ஜர்ணே ஜபே
சார்ங்க ஜ்யாகிண கர்க்கசிம்நி ஸூமந: ஸ்ரக் மோஹநே மார்த்தவே
தோர்த்வந்த்வம் பஹூச: ப்ரலோப்ய கமலா லீலா உபதாநம் பவத்
தத்சித்ர அலக முத்ரிதம் விஜயதே ஸ்ரீரங்க ஸம்ஸங்கிந:

பொருள் – (பெரியபெருமாளின் திருக்கரங்களைக் கூறுகிறார்) என்னைக் காப்பது என்னும் விரதம் பூண்ட பெரியபெருமாள், அதற்காகவே தனது திருகரத்தில் ஸூத்ர கங்கணம் அணிந்துள்ளான். அவனது திருக்கரத்தில் சார்ங்கம் என்னும் வில்லின் தழும்புகள் காணப்படுகின்றன. அவனது திருக்கரத்தைக் காணும்போது மலர்மாலையோ என்று ஐயம் கொள்ளும்படியாக உள்ளது. இப்படியாக அவனது இளமையில் மயங்கி நிற்கும் ஸ்ரீரங்கநாச்சியாருக்கு, அவனது திருக்கரங்கள் தலையணையாக உள்ளது. அவ்விதம் அவள் அவனது திருக்கரத்தில் சாய்ந்துள்ளபோது, அவளது கூந்தலால் அந்தக் கைகளில் அடையாளங்கள் இடப்படுகின்றன. இப்படியாக பெரியபெருமாளின் இரண்டு திருக்கரங்களும் சிறப்பாக உள்ளன.

109. பவ ஆர்த்தாநாம் வக்த்ர அம்ருத ஸரஸி மார்க்கம் திசத் இவ
ஸ்வயம் வக்த்ரேண இதம் வரதம் இதி ஸந்தர்சிதம் இவ
கர அம்போஜம் பங்கேருஹ வநருஷா இவ பாடலம் இவ
ச்ரயாமி ஸ்ரீரங்கே சயிது: உபதாநீக்ருதம் அஹம்

பொருள் – (பெரியபெருமாளின் வலது திருக்கரத்தைக் கூறுகிறார்) ஸம்ஸாரத்தில் இழிந்து மிகவும் கொதித்தபடி உள்ளவர்களின் வேதனை தீர்க்கும் அமிர்த தடாகமாக பெரியபெருமாளின் திருமுகம் உள்ளது. அந்தக் குளத்தை அடையும் வழியைக் காண்பிப்பது போன்று பெரியபெருமாளின் வலது திருக்கரம் உள்ளது, இந்தத் திருக்கரமே அனைத்து வரன்களையும் அளிக்கவல்லது என்று அவனது திருமுகமே சுட்டிக் காண்பிப்பது போன்று உள்ளது. தாமரைக்காடு ஒன்றின் மீது உண்டான சீற்றத்தின் காரணமாக சிவப்பது போன்று, அது போன்று சிவந்துள்ளது. இப்படியாக பெரியபெருமாளுக்குத் தலையணையாக உள்ள தாமரை போன்ற வலது திருக்கரத்தை நான் பற்றுகிறேன்.

விளக்கம் – இன்கு தாமரைக்காட்டின் மீது கொண்ட சீற்றம் என்பது என்ன? நம்மாழ்வார் திருவாய்மொழியில் – கட்டுரைக்கில் தாமரை நின் கண் பாதம் கை ஒவ்வா – என்னதான் உவமையாகக் கூறினாலும் உனது திருக்கண்கள், திருவடிகள், திருக்கரங்கள் ஆ…இயவற்றின் முன்பாகத் தாமரை நிற்க இயலாது – என்றார். இதனைக் கேட்ட பின்னராவது தாமரை மலர்கள் வெட்கம் கொண்டு, தண்ணீரின் உள்ளேயே இருக்க வேண்டும் அல்லவா? ஆனால், அப்படியும் அவை தங்கள் தலையை வெளியே காண்பிக்கின்றனவே என்ற கோபம் பெரியபெருமாளின் திருக்கரத்திற்கு உண்டானது என்று கருத்து.

110. கிரீடம் ஸ்ரீரங்கேசயிது: உபதாநீக்ருத புஜ:
விதி ஈச அதீசத்வாத் கடதே இதி ஸம்ஸ்ருச்ய வததி
நிஹீநாநாம் முக்க்யம் சரணம் இதி பாஹூ: ததிதர:
ஸ்ப்புடம் ப்ருதே பாத அம்புஜ யுகளம் ஆஜாநு நிஹித:

பொருள் – (இரண்டு திருக்கரங்களை மீண்டும் கூறுகிறார்) பெரியபெருமாளின் தலையணை போன்று வலது திருக்கரமானது உள்ளது. அந்தத் திருக்கரம் அவனது திருமுடியைத் தொட்டுக் காண்பித்து – ப்ரம்மன், ருத்ரன் முதலானோருக்கு இவனே தலைவனாக உள்ளதால், இந்தக் க்ரீடம் இவனுக்கு எத்தனை பொருத்தமாக உள்ளது – என்று கூறுவது போன்று உள்ளது. அவனது மற்றொரு திருக்கரமானது முழந்தாள்கள்வரை நீண்டுள்ளன. அந்தத் திருக்கரம் அவனது தாமரை போன்ற திருவடியினைத் தொட்டுக் காண்பித்து – தாழ்ந்தவர்களின் புகலிடம் இதுவே – என்று கூறுவது போல் உள்ளது.

ஸ்ரீபராசரபட்டர் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீபாஷ்யம்
(பகுதி – 10)

3–2–24 ப்ரகாசாதிவத் ச அவைசேஷ்யம் ப்ரகாச: ச கர்மணி அப்யாஸாத்

பொருள் – ஞானமயமாகவும் ஆனந்தமயமாகவும் உள்ளது போன்றே, மூர்த்தமாகவும் அமூர்த்தமாகவும் உள்ள பொருள்களைத் தனது உடலாகப் ப்ரஹ்மம் கொண்டுள்ளது என்றே யோகிகள் காண்கின்றனர். இடைவிடாமல் உபாஸனத்தில் நின்றால் இத்தகைய ப்ரஹ்மம் உணரப்படுகிறது.

பாஷ்யம் – விக்ரஹம் போன்றவற்றைக் கண்டு – ப்ரஹ்மம் இந்த அளவே – என்று எண்ணுவதை மட்டுமே நேதிநேதி என்ற உபனிஷத் வரி மறுக்கிறது அன்றி, மூர்த்தமாகவும் அமூர்த்தமாகவும் ப்ரஹ்மரூபம் அறியப்படுவதை மறுக்கவில்லை, இதற்கு என்ன காரணம்? வாமதேவர் போன்றவர்கள் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபங்களை நேரடியாகக் கண்டு உணர்ந்தவர்கள் ஆவர். தாங்கள் ப்ரஹ்மத்தை ஞானமயமாகவும் ஆனந்தமயமாகவும் கண்டது போன்றே மூர்த்தம், அமூர்த்தம் போன்றவையாகவும் ப்ரஹ்மத்தைக் காண்கின்றனர். இதே போன்றே இந்த உலகைத் தனது உடலாகப் ப்ரஹ்மம் கொண்டுள்ளதையும் காண்கின்றனர். உதாரணமாக ப்ருஹத் உபனிஷத் (1–4–10) – தத்தைதத் பச்யந் ருஷி: வாமதேவ: ப்ரதிபேதே அஹம் மநுரபவம் ஸூர்யச்ச – நானே மனுவாகவும், சூரியனாகவும் ஆனேன் (சூரியனையும், மனுவையும் உடலாக உடைய ப்ரஹ்மத்தை என் அந்தர்யாமியாகக் கோண்டுள்ளேன் என்று கருத்து) என்று வாமதேவர் கூறினார் – என்பதைக் காணலாம். வாமதேவர் போன்றவர்களுக்கு, அவர்களது தடையில்லாத உபாஸனை மூலம் ஞானம், ஆனந்தம் போன்றவற்றைத் தனது ஸ்வரூபமாக உடைய ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் புலப்படுகிறது. இதனைப் போன்றே இடைவிடாத உபாஸனை மூலம் மூர்த்தம், அமூர்த்தம் போன்றவை மூலமாகவும் ப்ரஹ்மத்தை உணரலாம். இதுவே இங்கு உணர்த்தப்பட்டது.

இனி அடுத்து சூத்திரம் மூலம் ப்ரஹ்மத்தின் உபயலிங்கத் தன்மையைக் (திருக்கல்யாண குணங்கள் உடையவன், தோஷங்களால் தீண்டப்படாதவன்) கூறி இந்த அதிகரணத்தை முடிக்கிறார்.

3–2–25 அதோ அநந்தேந ததாஹி லிங்கம்

பொருள் – மேலே கூறப்பட்ட பல காரணங்களால் ப்ரஹ்மம் உபயலிங்கமாகவே உள்ளது.

பாஷ்யம் – மேலே கூறப்பட்ட பலவிதமான காரணங்கள் மூலம் ப்ரஹ்மமானது அளவற்ற திருக்கல்யாண குணங்கள் கொண்டது என்று உணரலாம். இதனை ஏற்றால் மட்டுமே ப்ரஹ்மம் உபயலிங்கம் என்பது உண்மையாகிறது.

அதிகரணம் – 6 – அஹிகுண்டலாதிகரணம்

ஆராயப்படும் விஷயம் – கடந்த அதிகரணத்தில் ப்ரஹ்மத்தின் ரூபமாக அசேதனப் பொருள்களான மூர்த்தமும் (விக்ரஹம்), அமூர்த்தமும் (பிரபஞ்சமே ப்ரஹ்மத்தின் சரீரம் முதலானவை) கூறப்பட்டன. இவ்விதம் அசேதனப் பொருள்களைத் தனது ரூபமாக ப்ரஹ்மம் கொண்டால், அந்த அசேதனங்களிடம் உள்ள தோஷங்கள் ப்ரஹ்மத்திற்கு ஏற்படலாம் என்ற ஐயம் நீக்கப்படுகிறது.

3–2–26 உபயவ்யபதேசாத் து அஹிகுண்டலவத்

பொருள் – இரண்டு விதமாகவும் கூறப்படுவதால், பாம்பு தன்னுடைய உடலை நீட்டிக்கொள்ளவதும் சுருக்கிக் கொள்வதும் போல்.

பூர்வபக்ஷம் – (இது ஒரு பூர்வபக்ஷ சூத்திரம்) – மூர்த்தம், அமூர்த்தம் ஆகிய அசித்ரூபமாக ப்ரஹ்மம் உள்ளது என்பதை ப்ருஹத் உபனிஷத் (4–3–1) – த்வேவாவ ப்ரஹ்மணோ ரூபே – இந்த இரண்டும் ப்ரஹ்மத்தின் ரூபம் – என்றது. இதனைத் தொடர்ந்து ப்ருஹத் உபனிஷத் (2–3–6) – அதாத ஆதேஸ: நேதி நேதி – மூர்த்தம், அமூர்த்தம் என்ற அசித் பொருள்கள் மட்டுமே ப்ரஹ்மம் அல்ல – என்றது. இதன் மூலம் ப்ரஹ்மத்தின் அளவானது அந்த அசித் பொருள்களின் அளவு மட்டுமே என்பது தள்ளப்பட்டது. இதன் காரணம் ப்ருஹத் உபனிஷத்தில் (2–3–6) – ந ஹி ஏதஸ்மாத ந அத்ய அந்யத பரமஸ்தி – இதை விட உயர்ந்தது ஏதும் இல்லை – என்று ப்ரஹ்மத்தைக் காட்டிலும் உயர்ந்த பொருள் வேறு இல்லை எனப்பட்டது. இதனை மேலும் தெளிவாகக் கூற விரும்பிய ப்ருஹத் உபனிஷத் (2–3–6) – அத மாமதேயம் ஸத்யஸ்ய ஸத்யம் ப்ராண ஏவ ஸத்யம் தேஷாம் ஏஷ ஸத்யம் – ப்ராணனை அண்டியுள்ள ஜீவனைவிட பரமாத்மா ஸத்யமாக உள்ளான், ஞானச் சுருக்கம் ஏற்படாத காரணத்தால் ஸத்யம் எனப்பட்டான் – என்று கூறியது காண்க. கீழே உள்ள பல வரிகளும் ப்ரஹ்மத்தை உயர்வாகவே கூறுகின்றன:

- ஸ்வேதாஸ்வதர உபநிஷத் (6–16) – ப்ரதான க்ஷேத்ரஜ்ஞபதிர் குணேச: – ப்ரதானத்தின் அதிபதி, க்ஷேத்ரத்தை அறிபவன் திருக்கல்யாண குணங்களின் இருப்பிடம்

- மஹாநாராயண உபநிஷத் (13–1) – பதிம் விச்வஸ்ய ஆத்மேச்வரம் – இந்த ப்ரபஞ்சத்தின் நாதன், ஆத்மாவின் ஈச்வரன்

- ஸ்வேதாஸ்வதர உபநிஷத் (6–13) – நித்யோ நித்யச்சேத நச்சேதநாநாம் – நித்யர்களில் நித்யன், சேதனங்களின் உயர்ந்த சேதனன்

இப்போது அசித் பொருளால் ப்ரஹ்மத்தின் ரூபம் உள்ளபோதிலும் (மூர்த்தமாகவும், அமூர்த்தமாகவும்), ப்ரஹ்மம் தோஷம் அற்றது என்று கூறுவதற்காக, அந்த அசித்பொருள்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்று கூறப்படுகிறது. பாம்பு ஒன்று நீண்டும் சுருண்டும் கிடப்பது போன்று, ப்ரஹ்மம் அசித் பொருளைக் கொண்டுள்ளதா? (இதன் கருத்து ஒரே பொருளாக உள்ள பாம்பு இரண்டு விதமாக இருக்கலாம் – சுருண்டும் நீண்டும் கிடக்கலாம். இது போன்று ப்ரஹ்மம் இரு விதமாகவும் உள்ளதா?) அல்லது சூரியனும், அதன் ஒளிக்கதிர்களும் போன்று ஒரே ஜாதியைச் சார்ந்ததா? அல்லது ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் அம்சம் – அம்சி (ஒன்று மற்றதன் அம்சம்) என்ற பாவம் கூறப்பட்டது போன்று, இங்கு ப்ரஹ்மத்திற்கும் அசித்திற்கும் அம்சி – அம்சம் என்ற பாவம் கூறப்பட்டதா?

இங்கு ஒரு கேள்வி எழக்கூடும். பின்வரும் சூத்திரங்களைக் காணவும்:

- ப்ரஹ்ம சூத்திரம் (1–4–23) – ப்ரக்ருதிச்ச ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தானுபரோதாத் – ப்ரஹ்மமே உபாதானக் காரணமும் ஆகும் (உபாதானக்காரணம் என்றால் ஒரு பொருளை எதிலிருந்து செய்கிறோமே அந்த மூலப்பொருள் ஆகும். குடம் என்ற பொருளுக்கு மண் என்பது உபாதானக் காரணம் ஆகும்).

- ப்ரஹ்மசூத்திரம் (2–1–15) – ததநந்யத்வம் ஆரம்பணசப்தாதிப்ய: – பொருளும் காரணமும் வேறு அல்ல.

இந்தச் சூத்திரங்களின் மூலம் ப்ரஹ்மத்திற்கும் அசித்திற்கும் இடையே உள்ள அம்சி – அம்ச பாவம் என்பது முன்பே ஆராயப்பட்டது. இதனைக் குறித்து இங்கு மீண்டும் ஆராய அவசியம் இல்லை அல்லவா? இந்தக் கேள்வி சரியான கேள்வி ஆகும். ஆயினும் இந்த அதிகரணத்தின் மூலமாகவே ப்ரஹ்மத்திற்கும் அசித்திற்கும் இடையே உள்ள அம்சி – அம்ச பாவம் என்பது கூறப்பட உள்ளது. இதனை இங்கு கூறப்பட உள்ளதை முன் கூட்டியே நீங்கள் கூறிய சூத்திர வரிகள் உணர்த்துகின்றன.

ஆக மேலே கூறிய மூன்று விதமான கேள்விகளில், ப்ரஹ்மத்திற்கும் அசித்திற்கும் உள்ள தொடர்பு எவ்விதம் கூறப்படலாம்? அஹிகுண்டலத்வாத் – பாம்பு நீட்டியும் சுருண்டும் உள்ளது போன்று – என்பதே சரியான விடையாகும் (அதாவது ப்ரஹ்மமே அசித்வஸ்து போன்றும், ப்ரஹ்மம் போன்றும் உள்ளது) – எப்படி? ஏன்? உபயவ்யபதேசாத் – ப்ரஹ்மத்தைப் பற்றி இந்த இரண்டு விதமாகவும் கூறப்பட்டுள்ளதால் ஆகும். கீழே உள்ள வரிகள் காண்க:

- ப்ருஹத் உபனிஷத் (4–5–1) – ப்ரஹ்ம ஏவ இதம் ஸர்வம் – இவை அனைத்தும் ப்ரஹ்மமே
- சாந்தோக்ய உபனிஷத் (7–25–2) – ஆத்மா ஏவ இதம் ஸர்வம்–– இவை அனைத்தும் ஆத்மாவே

இந்த இரண்டு வரிகள், ப்ரஹ்மத்திற்கும் ப்ரபஞ்சத்திற்கும் (அசித்) உள்ள ஒற்றுமையைக் கூறுகின்றன. மேலும் சாந்தோக்ய உபநிஷத் (6–3–2) – ஹந்தாஹமிமாஸ் திஸ்ரோ தேவதா: அநேந ஜீவேந ஆத்ம அநுப்ரவிச்ய – தேஜஸ், நீர், பூமி ஆகிய மூன்றின் உள்ளே புகுந்து பலவித நாமரூபங்களை எடுக்கிறேன் – என்றது. இந்த வரி மூலமாக அசித்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு கூறப்பட்டது. ஆகவே சுருண்டுள்ளதும் நீண்டுள்ளதும் பாம்பின் வெவ்வேறு நிலைகள் போன்று, அசித் என்பதும் ப்ரஹ்மத்தின் ஒருவகையான விசேஷ நிலை என்பதாகிறது.

3–2–27 ப்ரகாசாச்ரயவத்வா தேஜஸ்த்வாத்

பொருள் – ஒளியும் அதன் உற்பத்தி இடமும் போன்று – காரணம் இரண்டும் தேஜஸ் என்றும் ஜாதியைச் சேர்ந்ததால்.

பூர்வபக்ஷம் – (இந்தச் சூத்திரம் ஒரு பூர்வபக்ஷ சூத்திரம்) – சூத்திரத்தில் உள்ள வா என்ற பதம் மேலே உள்ள இரண்டு வாதங்களையும் (பாம்பு போன்று நீண்டும் சுருண்டும் உள்ளது, அம்சம் – அம்சி பாவமாக உள்ளது) தள்ளுகிறது. ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் அசித்ரூபமாக உள்ளது என்று வைத்துக்கொண்டால், அவை இரண்டும் வெவ்வேறு என்று கூறும் பேதஸ்ருதி வரியானது பயனற்றுப் போய்விடும். மேலும் ப்ரஹ்மம் மாற்றம் அடையாமல் உள்ளது என்று கூறும் ஸ்ருதி வரியும் பயனற்றதாகிவிடும். ஆகவே ப்ரஹ்மத்திற்கும் அசித்திற்கும் இடையே உள்ள தொடர்பு என்பது, ஒளியும் அந்த ஒளியின் உற்பத்தி இடமும் போன்றதாகும். ஒளியும், அதன் உற்பத்தி இடமும் – ஒளி என்ற ஜாதியைச் சேர்ந்தது போன்று, ப்ரஹ்மமும் அசித்தும் ப்ரஹ்மத்தின் நிலை என்பதாகும்.

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாதன் திருவடிகளே சரணம்
ஸ்ரீ வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ வேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்
(பகுதி – 10)

அசேதந த்ரவ்யங்கள்

த்ரிவிதாசேதனங்களும் பரருக்கே தோன்றக்கடவனவாயிருக்கும் அசேதனத்வமாவது ஞானாச்ரயமன்றிக்கேயொழிகை. பிறருக்கே தோன்றுகையாவது தன் ப்ரகாசத்துக்குத்தான் பலியன்றிக்கேயொழிகை. இவையிரண்டும் தர்மபூத ஞானாதிகளுக்கும் துல்யம்.

விளக்கம் – மூன்று வகையான அசேதனங்கள் மற்றவர்களுக்காக தோன்றுகின்றனவே அல்லாமல் தங்களுக்காக அல்ல. அசேதனம் என்றால் ஞானம் இன்றி இருத்தல் என்பதாகும். மற்றவர்களுக்காக தோன்றுதல் என்பதன் பொருளாவது, அவை தங்களுக்குத் தாங்களே பயன் அளித்துக்கொள்வதில்லை என்பதாகும். இவைகளுடைய தர்மபூதஞானம் என்பதற்கும் இந்த இரண்டும் (ஞானம் இல்லாமல் இருக்கும் நிலை, தனக்காக இல்லாமல் உள்ள நிலை) பொருந்தும்.

த்ரிவிதாசேதனங்களென்றெடுத்தவற்றில் ப்ரக்ருதியும் காலமும் ஜடங்கள். சுத்தஸத்வமான த்ரவ்யத்தையும் ஜடமென்று சிலர் சொல்லுவார்கள். ஜடத்வமாவது ஸ்வயம்ப்ரகாசமன்றிக்கேயிருக்கை. பகவச்சாஸ்த்ராதி பராமர்சம் பண்ணினவர்கள் ஞானாத்மகத்வம் சாஸ்வ ஸித்தமாகையாலே சுத்தஸத்வத்ரயத்தை ஸ்வயம்ப்ரகாசமென்பார்கள்.

பொருள் – மூன்று வகையான அசேதங்களில் ப்ரக்ருதியும், காலமும் ஜடப்பொருள்கள் ஆகும். ஒரு சிலர் சுத்தஸத்வத்தையும் ஜடப்பொருள் என்று கூறுவதுண்டு, ஜடப்பொருள் என்றால் தன்னைத்தானே வெளிப்படுத்த இயலாத பொருள் ஆகும். பாஞ்சராத்ரம் முதலான ஆகமங்களை ஆராய்ந்து கற்றவர்கள், சாஸ்த்ரங்களில் கூறப்பட்டபடி, சுத்தஸத்வம் என்பது ஞானம் பொருந்தியதாக உள்ளதால், ஜடம் அல்ல, தானாகவே வெளிப்படக்கூடியது என்பார்கள் (சுத்தஸத்வம் என்பது முழுவதும் ஸத்வமயமானது. ஸ்ரீவைகுண்டத்தில் இது மட்டுமே உள்ளது. எம்பெருமான், பெரியபிராட்டி ஆகியோரின் திருமேனிகள் சுத்தஸத்வத்தால் ஆனவை என்றே அறியப்படுகிறது).

இப்படி ஸ்வயம்ப்ரகாசமாகில் ஸம்ஸாரிகளுக்கு சாஸ்த்ரவேத்யமாக வேண்டாதே தானே தோன்ற வேண்டாவோவென்னில் ஸர்வாத்மாக்களுடையவும் ஸ்வரூபமும் தர்மபூதஞானமும் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்க ஸ்வரூபம் தனக்கே ஸ்வயம்ப்ரகாசமாய் வேறெல்லார்க்கும் ஞானாந்தரவேத்யமானாற் போலவும், தர்மபூதஞானம் ஸ்வாச்ரயத்துக்கே ஸ்வயம்ப்ரகாசமாய் இதரருக்கு ஸ்வயம்ப்ரகாசம் அல்லாதாப்போலவும் இதுவும் நியதவிஷயமாக ஸ்வயம்ப்ரகாசமானால் விரோதமில்லை.

விளக்கம் – இவ்விதம் (சுத்தஸத்வம்) தானாகவே வெளிப்படும் திறன் உள்ளது என்றால், சாஸ்த்ரங்கள் மூலம் அறியப்படவேண்டிய அவசியம் இல்லாதது என்றால், அது ஏன் ஸம்ஸாரத்தில் உள்ளவர்களுக்குப் புலப்படாமல் உள்ளது? இதற்கான விடை கூறுவோம். ஆத்மாவின் ஸ்வரூபமான ஞானமும், அதன் தர்மபூதஞானமும் தானாகவே வெளிப்படக்கூடியவை ஆகும். இதில் ஆத்மாவின் ஸ்வரூபம் என்பது அந்த ஆத்மாவிற்கு மட்டுமே வெளிப்படும், மற்றவர்களுக்கு அவரவர்களின் தர்மபூதஞானம் வழியாகவே மற்ற ஆத்மாவின் ஸ்வரூபம் புலப்படும். ஆனால்

தர்மபூதஞானம் என்பது அந்த ஆத்மாவிற்கு மட்டுமே புலப்படும், மற்றவர்களுக்கு அல்ல. இது போன்று சுத்தஸத்வம் என்பது ஈச்வரன், நித்யர், முக்தர் ஆகியோருக்கு மட்டுமே தானாகவே வெளிப்படும், மற்றவர்களுக்கு அல்ல. ஆக இந்தக் கருத்துக்களில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை.

யோ வேத்தி யுகபத்ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத:
தம் ப்ரணம்ய ஹரிம் சாஸ்த்ரம் ந்யாயதத்வம் ப்ரசக்ஷ்மஹே

என்கிறபடியே தர்மபூதஞானத்தாலே ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரித்துக் கொண்டிருக்கிற ஈச்வரனுக்கு சுத்தஸத்வத்ரயம் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கிறபடி எங்ஙனேயென்னில் – இவனுடைய தர்மபூதஞானம் திவ்யாத்மஸ்வரூபம் ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கிறாப்போலே இதுவும் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கலாம். இப்படி நித்யருக்கும் துல்யம். விஷயப்ரகாச காலத்திலே தர்மபூதஞானம் ஸ்வாச்ரயத்துக்கே ஸ்வயம்ப்ரகாசமானாற்போலே முக்தருக்கும் அவ்வவஸ்தையிலே இதுவும் ஸ்வயம்ப்ரகாசமானால் விரோதமில்லை. தர்மபூதஞானத்தினுடைய ஸ்வாத்ம ப்ரகாசன சக்தியானது விஷயப்ரகாசமில்லாத காலத்தில் கர்மவிசேஷங்களாலே ப்ரதிபத்தையானாற்போலே சுத்தஸத்வத்தினுடைய ஸ்வாத்ம ப்ரகாசன சக்தியும் பத்ததசையில் ப்ரதிபத்தையாகையாலே சுத்தஸத்வம் பத்தருக்கு ப்ரகாசியாதொழிகிறது.

விளக்கம் – ந்யாய தத்வத்தின் மங்கள ச்லோகம் – யோ வேத்தி யுகபத்ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத: தம் ப்ரணம்ய ஹரிம் சாஸ்த்ரம் ந்யாயதத்வம் ப்ரசக்ஷ்மஹே – எந்த ஒரு ஸர்வேச்வரன் அனைத்தையும் ஒரே நேரத்தில் தனது ஸ்வபாவம் காரணமாக அறிகிறானோ, அப்படிப்பட்ட ஹரியை வணங்கிவிட்டு ந்யாயதத்வம் என்ற இந்த சாஸ்த்ரத்தைக் கூறுகிறோம் – என்றது. இங்கு ஒரு கேள்வி எழலாம். சுத்தஸத்வமானது ஸர்வேச்வரனின் தர்மபூதஞானத்தாலேயே அவனுக்குப் புலப்படுகிறது, இப்படி உள்ளபோது அவனுக்கு சுத்தஸத்வம் தானாகவே புலப்படுவதாகக் கூறுவது எப்படி? விடை அளிப்போம் – ஸர்வேச்வரனின் தர்மபூதஞானம் என்பது அவனது திவ்யமான ஸ்வரூபம் உட்பட அனைத்தையும் புலப்பட வைக்கிறது என்று கூறினோம், ஆயினும் அவனது ஸ்வரூபம் தானாகவே வெளிப்படவல்லது என்று கூறவில்லையா? இதுபோன்று அவனுக்கு சுத்தஸத்வமும் தர்மபூதஞானம் வழியே வெளிப்பட்டாலும், தானாகவே வெளிப்படுவதாகவே கொள்ளவேண்டும். இது நித்யசூரிகளுக்கும் பொருந்தும். ஒரு பொருளை உணர்த்தவல்ல காலத்தில், அந்த ஆத்மாவிற்கு தர்மபூதஞானம் தானாகவே தன்னை வெளிப்படுத்துவது போன்று (அந்தப் பொருள் உணரப்படுவதே தர்மபூதஞானம் தன்னை வெளிப்படுத்துவதால்தான்), முக்தி அடைந்தவர்களுக்கு சுத்தஸத்வமானது தானாகவே தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும். இதில் எந்த முரண்பாடும் இல்லை. ஆனால் கர்மம் காரணமாக, ஒரு பொருளை உணர்த்தவேண்டிய நேரத்தில்கூட தர்மபூதஞானம் தடைபட்டு, தன்னை வெளிப்படுத்திக்கொள்ள இயலாமல் போகலாம். இது போன்றே ஸம்ஸார பந்தத்தில் உள்ளதால், சுத்தஸத்வம் என்பது தன்னைத் தானாகவே வெளிப்படுத்த இயலாமல் போகிறது.

திய: ஸ்வயம்ப்ரகாசத்வம் முக்தௌ ஸ்வாபாவிகம் யதா
பத்தே கதாசித்ஸம்ருத்தம் ததா அத்ராபி நியம்யதே

பொருள் – மோக்ஷ காலத்தில் தானாகவே வெளிப்படும் தர்மபூதஞானமானது, ஸம்ஸார காலத்தில் சில நேரங்களில் தடைபட்டு உள்ளது, இது போன்றே சுத்தஸத்வ விஷயத்திலும் கொள்ளவேண்டும்.

இவ்வளவு அவஸ்தாந்தராபத்தி விகாரித்ரவ்யத்துக்கு விருத்தமன்று. ஆகையாலே ப்ரமாணப்ரதிபந்நார்தத்துக்கு யுக்திவிரோதம் சொல்ல வழியில்லை. இங்ஙனன்றிக்கே உபசாரத்தாலே நிர்வஹிக்கப்பார்க்கில் ஆத்ம ஸ்வரூபத்திலும் ஞானாதிசப்தங்களை அன்யபரங்களாக்கலாம். ஸ்வயம்ப்ரகாசத்துக்கு ரூபரஸாதிகுணங்களுக்கும் அவையடியாக வந்த ப்ருதிவ்யாதி விபாகமும் பரிணாமாதிகளும் கூடுமோவென்கிற சோத்யமும் தர்மபூதஞானத்துக்கும் தர்மிஞானத்துக்குமுண்டான வைஷம்யங்களை ப்ரதிபந்தியாகக் கொண்டு ப்ரமாணபலத்தாலே பரிஹ்ருதம். இப்படி ஸ்வயம்ப்ரகாசமான சுத்தஸத்வத்ரயத்தை ஞாத்ருத்வமில்லாமையாலே த்ரிவிதாசேதனங்களென்று சேரக்கோத்தது.

விளக்கம் – தொடர்ந்து மாற்றம் அடைந்தபடி உள்ள பொருள்கள் ஒரு சில நேரங்களில் ஒருவரால் ஏற்கவும்படலாம், நிராகரிக்கவும்படலாம், மற்றவர்களும் அந்தப் பொருள் குறித்து இதே போன்று இருக்க வாய்ப்புண்டு. இதில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை. ப்ரமாணங்களால் தெளிவாக நிரூபிக்கப்பட்ட பொருள்களுக்கு உதாரணம் மூலம் முரண்பாடு கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. இங்கு ஒரு சிலர் – சுத்தஸத்வமானது தானாகவே வெளிப்படும் என்பது உபசாரமாக (உதாரணமாக சிங்கம் போன்ற மாணவன் என்றால் அது அந்த மாணவனைப் புகழ்வதற்கான உபசாரமாகும். உண்மையில் அவன் சிங்கம் அல்லன்) மட்டுமே கூறப்படுகிறது, உண்மையில் அவ்விதம் இல்லை – என்று கூறலாம். இப்படிக்கொண்டால் – ஆத்மாவும் ஞானமயமானது அல்ல, ஆனந்தமயமானது அல்ல என்றும் கூறலாமே. இது பெருத்த முரண்பாடாகிவிடும் அல்லவோ? இவர்கள் ஒரு கேள்வி கேட்கலாம் – தானாகவே வெளிப்படும் ஒரு பொருளுக்கு எவ்விதம் ரூபம், சுவை, குணங்கள் முதலானவை அமையும்? தானாகவே வெளிப்படும் ஆத்மா, தர்மபூதஞானம் போன்றவற்றுக்கு இது போன்று சுவை, ரூபம் முதலானவை இல்லை அல்லவோ? இதற்கு விடை அளிப்போம். தானாகவே வெளிப்படும் பொருள்களில் அடிப்படையான பேதங்கள் உள்ளதால் இவ்விதம் ஒத்துக் கூற இயலாது. ஆகவே இது போன்ற இடங்களில் சாஸ்த்ரங்களையே ப்ரமாணங்களாக எடுத்துக் கொள்ளவேண்டும். தானாகவே வெளிப்படும் சுத்தஸத்வம் என்பது சேதனம் மற்றும் அறிபவன் ஆகிய இரண்டின் தன்மைகளும் இன்றி இருப்பதால், இது மூன்று விதமான அசேதனத்தில் சேர்க்கப்பட்டது.

இவ்வசேதநங்கள் மூன்றுக்கும் ப்ரவ்ருத்தியாவது ஈச்வரஸங்கல்பானுரூபங்களான விசித்ர பரிணாமாதிகள்.

விளக்கம் – இந்த மூன்று வகையான அசேதங்களின் செயல்பாடு (ப்ரவ்ருத்தி) என்பது ஈச்வரனின் ஸங்கல்பத்தின் காரணமாக தொடர்ந்து மாறியபடி இருத்தலே ஆகும் (பரிணாமம்).

துாப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

.........தொடரும்

Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog: namperumal.wordpress.com Groups: groups.yahoo.com/emperumanar

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

முமுக்ஷுப்படி

ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம் (பகுதி – 10)

54. அகாரத்திலே கல்யாண குணங்களைச் சொல்லுகையாலே, இந்த சேஷத்வமும் குணத்தாலே வந்தது.

அவதாரிகை – அபிமத விஷயத்தில் சேஷத்வம் ஸுகமாகிறது. அவ்விஷயத்தில் குணமடியாக வந்ததாகையாலேயன்றோ என்ன, அருளிச்செய்கிறார் அகாரத்தில் என்று தொடங்கி.

விளக்கம் – இன்பம் அளிக்கும் பொருள்களுக்கு அடிமையாக இருப்பது சுகமாக உள்ளது. இதற்குக் காரணம் அந்த பொருள்களில் உள்ள இன்பம் அளிக்கும் தன்மைகளால் ஆகும். அதே கருத்து இங்கும் பொருந்துமா? இதற்கு விடை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, ஈச்வரனுடைய ரக்ஷகத்வப்ரதிபாதகமான அகாரத்திலே அந்த ரக்ஷணோபயோகியான கல்யாணகுணங்களைச் சொல்லுகையாலே, ஈச்வர விஷயமான இந்த சேஷத்வமும் அந்த குணங்களடியாக வந்தது என்கை. ஆகையால், இதுவும் ஸுக்ருபமாயிருக்கக் குறையில்லையென்று கருத்து.

விளக்கம் – ஈச்வரனுடைய ரக்ஷகத் தன்மையைக் கூறுகின்ற அகாரத்தில் (அ என்னும் எழுத்து), அந்த ரக்ஷகத் தன்மைக்கு அடிப்படையான திருக்கல்யாண குணங்களும் கூறப்படுகிறது. எம்பெருமானிடம் அடிமையாக இருத்தல் என்பது இந்த கல்யாண குணங்களின் காரணத்தாலேயே ஆகும். ஆகவே இவ்விதம் அடிமையான இருத்தல் இன்பம் அளிக்கவல்லது என்று கூறுவதில் குறையில்லை.

55. சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம்

அவதாரிகை – ஆனால், ஔபாதிகமான இது ஸ்வரூபமன்றோ? என்ன அருளிச்செய்கிறார், சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம் என்று.

விளக்கம் – இவ்விதம் குணங்களால் மட்டுமே அடிமைத்தனம் உண்டாகிறது என்றால், அது செயற்கையாக வந்த அடிமைத்தனம், அப்படி எனில் ஆத்மாவிற்கு ஸ்வரூபத்திலேயே அடிமைத்தனம் இல்லையா என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது உகந்தவிஷயத்தில் இதன் ஸுக்ருபத்வத்துக்கு குணக்ருதத்வத்தை ஹேதுவாகச் சொல்லுகையாலே அந்த குணக்ருதத்வம் இங்கும் உண்டென்னுமிடத்துக்குச்சொன்ன இத்தனையொழிய, அர்த்தஸ்திதியை நிரூபித்தால் ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம், ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர, தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச இத்யாதிகளிலே இத்தை ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமாகச் சொல்லுகையாலே, சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம் என்கை.

விளக்கம் – நமக்குப் பிடித்த விஷயங்களில் சுகம் உள்ளது என்று கூறுவதற்காகவே அந்தப் பொருள்களுக்கு அடிமைப்பட்டிருத்தல் கூறினோம். இதனைப் போன்றே ஈச்வரன் விஷயத்திலும் எடுத்துக் கொள்ளக் கூடாது. கீழே உள்ள வரிகள் காண்க:

- விஷ்ணு ததவம் – ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம் – ஈச்வரனுக்கு உடைமையாய் உள்ள தன்மையே ஆத்மாவின் ஸ்வரூபமாகும்.
- விஷ்ணு தத்வம் – ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர – ஆத்மாவின் அடிமைத் தன்மையையும், ஸ்ரீஹரியின் ஸ்வாமித்வத்தையும் எப்போழுதும் நினைக்கவேண்டும்.
- ஹாரித ஸ்ம்ருதி – தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச – அனைத்து ஆத்மாக்களும் பரமாத்மாவிற்கு இயற்கையாகவே அடிமைப்பட்டவை ஆகும். இதனைத் தவிர ஸம்ஸாரத்தில் இருந்தாலும், மோக்ஷம் பெற்றாலும் ஆத்மாவுக்கு வேறு இலக்கணம் இல்லை.

மேலே உள்ள வரிகளின் மூலம், ஆத்மாவுக்கு ஈச்வரனிடம் அடிமைப்பட்டிருத்தல் என்பது ஸ்வரூபம் என்பது விளங்குகிறது.

56. சேஷத்வமில்லாதபோது ஸ்வரூபமில்லை.

அவதாரிகை – சேஷத்வமேயென்று அவதரிப்பானேன்? ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமான ஆத்மவஸ்துவுக்கு அல்லாதபோதும் ஸ்வரூபம் இல்லையோ? என்ன அருளிச்செய்கிறார் சேஷத்வமில்லாதபோது ஸ்வரூபமில்லை என்று.

விளக்கம் – ஆத்மாவிற்கு ஞானம், ஆனந்தம் ஆகியவையும் ஸ்வரூபம் என்று கூறப்பட்டது. அப்படி உள்ளபோது, இங்கு அடிமைத்தனத்தை மட்டுமே (சேஷத்வம்) கூறுவது ஏன்? இந்த சேஷத்வம் இல்லை என்றால் ஆத்மாவின் ஸ்வரூபமே இல்லாமல் போய்விடுமா என்ற சந்தேகம் எழலாம். இதற்கு விடை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – சேஷத்வமில்லாதபோது ஆத்மாபஹாரரூபமான ஸ்வாதந்த்ரியபுத்தி நடக்கையாலே, ஸ்வரூபம் அழிந்துவிடும் என்னுமத்தை தர்சிப்பிக்கிறார் மேலிரண்டு வாக்யத்தாலே ஆத்மாபஹாரமாவது என்று தொடங்கி.

விளக்கம் – அடிமைத்தனம் இல்லாதபோது, ஈச்வரனுக்கு உடைமையான ஆத்மாவைத் திருடுவது, நாம் சுதந்திரமானவர்கள் என்று எண்ணத்தை உண்டாக்கி விடும். இதனால் ஆத்மாவின் ஸ்வரூபம் முழுவதுமாக அழித்து விடும். மேலே கூறியதையே மீண்டும் அடுத்த சூர்ணையிலும் விளக்குகிறார்.

57. ஆத்மாபஹாரமாவது ஸ்வதந்த்ரமென்கிற நினைவு, ஸ்வதந்த்ரமாம்போது இல்லையாய்விடும்.

வ்யாக்யானம் – யோ அன்யதாஸந்தமாத்மாநமந்யதா ப்ரதிபத்தே கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா என்று ஸர்வபாப மூலமாகச் சொன்ன ஆத்மாபஹாரமாவது தன் ஸ்வரூபம் ஸ்வதந்த்ரம் என்கிற ப்ரதிபத்தி, ஸ்வதந்த்ரம் ஆமளவில் அஸந்நேவ என்கிறபடியே ஸ்வரூபம் இல்லையாய்விடும் என்கை. ஆகையால் சேஷத்வமில்லாதபோது ஸ்வரூபமில்லை என்னத்தட்டில்லை என்று கருத்து.

விளக்கம் – ஆத்ம அபகாரம் (ஆத்மாவைத் திருடுதல் என்பது) என்பது அனைத்து பாவங்களுக்கும் மூல காரணமாகிவிடும், இது தன்னுடைய ஆத்மா சுதந்திரமானது என்று நினைவே ஆகும். இதனை மஹாபாரதம் – யோ அன்யதாஸந்தமாத்மாநமந்யதா ப்ரதிபத்தே கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா – பரமாத்மாவிற்கு அடிமையாக உள்ள ஆத்மாவை தனக்கே வசப்பட்டவனாக அறியும் ஆத்ம திருடன் ஒருவன், எந்தப் பாவத்தைதான்

செய்யவில்லை – என்று கூறியது. இவ்விதம் தான் சுதந்திரமானவன் என்ற எண்ணம் உண்டானவுடன் ஒருவன் – அஸந்நேவ – இல்லாதவனாக – ஆகிவிடுகிறான். எனவே அடிமைத்தனம் இல்லை என்றால் ஸ்வரூபமும் இல்லை என்று கூறுவதில் குறையில்லை.

ஆக, ப்ரக்ருத்யர்த்தமான ஈச்வரனுடைய காரணத்வமும், தாத்வர்த்தமான ரக்ஷகத்வமும், அர்த்தபலத்தால் வந்த ஸ்ரீய: பதித்வமும், ப்ரத்யயஸித்தமான சேதன சேஷத்வப்ரதிஸம்பந்தியான சேஷித்வமும் ஆகிற அகாரார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

விளக்கம் – ஆக இதுவரை அ என்ற எழுத்தின் பொருளாக – ஈச்வரனே அனைத்தின் காரணம், அவனே அனைத்தையும் காக்கிறான், அவனே பெரியபிராட்டியின் நாயகனாக உள்ளான், ஈச்வரன் எஜமானனாகவும் ஆத்மா அடிமையாகவும் உள்ள நிலை ஆகியவை விளக்கப்பட்டது.

58. ஸ்தாநப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணார்த்தம்

அவதாரிகை – அநந்தரம் மத்யமாக்ஷரமான உகாரத்துக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக உபக்ரமிக்கிறார், ஸ்தான ப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணார்த்தம் என்று.

விளக்கம் – அடுத்து ப்ரணவத்தின் நடு எழுத்தான – உ – என்பதற்குப் பொருள் அருளிச்செய்யத் தொடங்குகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, ததேவ பூதம் தது பவ்யமா இதம் என்றும், ததே வாக்விஸ்தத்வாயுஸ் தத் ஸூர்யஸ்தது சந்த்ரமா: என்றும் இத்யாதிகளிலே ஏவகாரஸ்தாநத்திலே உகாரத்தை ப்ரயோகிக்கக் காண்கையாலே, ஸ்தாந ப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணத்தை அர்த்தமாக உடைத்தாயிருக்கும் என்கை.

விளக்கம் – கீழே உள்ள உபனிஷத் வரிகள் காண்க:

- தைத்திரீய உபனிஷத் – ததேவ பூதம் தது பவ்யமா இதம் – அதுவே (ப்ரஹ்மமே) இறந்தகாலப்பொருள், எதிர்காலப்பொருள், மற்றும் நிகழ்காலப்பொருள்

- தைத்திரீய உபநிஷத் – ததே வாக்விஸ்தத்வாயுஸ் தத் ஸூர்யஸ்தது சந்த்ரமா: – அதுவே அக்நீ, அதுவே வாயு, அதுவே சூரியன், அது மட்டுமே சந்திரன்

மேலே உள்ள வரிகளில் தது என்ற பதத்தில் இருக்கும் உ என்னும் எழுத்து மூலம் – அதுவே – என்னும் அர்த்தம் கூறப்பட்டது. இதனால், உ என்னும் எழுத்து, – அது மட்டுமே – என்னும் பொருளைக் கூறவல்ல ஏவகாரத்தை விளக்குகிறது.

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த

சிறிய திருமடல்

(பகுதி – 10)

(கூராந்தவாளால் இத்யாதி) – தம்முடைய கையாலேயிறே தண்டிப்பது, ராமஸ்ய தக்ஷிணோ பாஹு: – தம்முடைய தோளாயிருக்கிற இளையபெருமாளை இடுவித்து தண்டிப்பித்தார். (கூரார்ந்த வாளால்) – கூர்மை மிக்கிருக்கிற வாளாலே. முரட்டுடம்பிலே வ்யாபரியா நின்றால் ரக்தஸ்பர்சமில்லாதபடி வ்யாபரிக்கலாம் வாள். (கொடி மூக்கும் காதிரண்டும் ஈரா விடுத்து) – பிராட்டியோடொப்பாக்கி அங்கவிசேஷங்களைப் பேணிவர, அவற்றைப் போக்கிவிட்டார். (ஈரா விடுத்து) – வாளின் கூர்மை சொல்லுகைக்காக கூரார்ந்த வாள் என்கிறது அங்கு, ஈர்ந்தது என்கையாலே ஈருகைக்கு அரிதான உடம்பின் திண்மை சொல்லிற்று இங்கு. (ஈரா விடுத்து) – பிறந்தகத்தில் நின்றும் புக்ககத்திற்கு வந்தாற்போலன்றியே புக்ககத்தில் நின்றும் பிறந்தகத்துக்குப் போம்போது ஓராதிக்யம் பண்ணிவிட வேணுமிறே. பெருமாளை ஆசைப்படச் செய்தேயும் பிராட்டி பக்கல் அபராதம் பண்ணுகையாலே விரூபையானாளிறே. ஆகையாலே இவ்விஷயத்திலே ஆசையுண்டானாலும் ததீயர் பக்கலிலே அபராதமுண்டானால் பலிக்கும் பலம், சூர்ப்பணகை பலம் என்கை. இவளாசைப்பட்ட விஷயமிறே சிந்தயந்தியும் ஆசைப்பட்டது. இப்படி அபராதமில்லாமையாலே அவள் பெற்றுப் போனாளிறே. (விடுத்து) – தருணௌ ரூபஸம்பந்நௌ என்று கரன் காலிலே விழும்படி பண்ணி.

விளக்கம் – (கூரார்ந்த வாளால்) – இங்கு இராமன் தன் கையால் தண்டித்தான் என்று ஏன் கூறவேண்டும்? இராமாயணத்தில் (ஆரண்ய காண்டம்) – ராமஸ்ய தக்ஷிணோ பாஹு: – இராமனின் வலது கை லக்ஷ்மணன் – என்று கூறப்பட்டது. ஆக தன்னுடைய தோளாக உள்ள லக்ஷ்மணன் செய்ததை, தான் செய்தது என்று கூறலாம் அல்லவோ? (கூரார்ந்த வாளால்) – கூர்மை மிகுந்த வாள் கொண்டு. அவளது உடல் முரட்டு உடம்பாக உள்ளதால், அதனை அறுக்கும்போது கடினமாக இருக்கும், ஆகவே அவ்வாறு அறுக்கும்போது அவளது இரத்தம் தன் மீது படாமல் இருக்கவேண்டுமானால் வாள் கூர்மையாக இருந்தால், இரத்தம் படும் முன்பாக வேகமாக அறுத்துவிடும் அல்லவா? (கொடி மூக்கும் காதிரண்டும்) – தன்னுடைய மூக்கையும், காதுகளையும் சீதையுடையது போன்று மாற்றி அமைத்து வந்ததால், அவற்றை அறுத்தான். (ஈரா விடுத்து) – கூர்மையான வாள் என்று உணர்த்துவதற்காக மேலே கூரார்ந்த வாள் என்றார், அந்த வாளால் அறுப்பதற்குக் கடினமான உடல் என்று உடலின் கடினத்தை இங்கு கூறுகிறார். (ஈரா விடுத்து) – ஒரு பெண் பிறந்து வீட்டில் இருந்து புகுந்த வீடு செல்லும்போது எந்தச் சிறப்பும் செய்யாமல், புகுந்த வீட்டிலிருந்து பிறந்த வீட்டுக்குச் செல்லும்போது அவளுக்கு மேன்மையை அளிக்கும்படிச் செய்வது உலக வழக்கம். இது போல் இவளுக்கு மூக்கை அறுத்து மேன்மை செய்தார் போலும். இவள் இராமன் மீது ஆசை கொண்டது தவறில்லை என்றாலும், சீதையைப் பகைத்து இராமன் மீது ஆசைக்கொண்டதால் தனது மூக்கை இழந்தாள். ஆகவே பகவான் மீது ஆசை ஏற்பட்டாலும், அவன் அடியார்களிடம் அபராதம் செய்தால் சூர்ப்பணகைக்கு நேர்ந்த கதியே உண்டாகும் என்று அறிக. இவளைப் போன்றே சிந்தயந்தி என்னும் கோபிகை ஒருவள் கண்ணன் மீது ஆசை கொண்டாள். ஆனால் அவள் சூர்ப்பணகை போன்று பாகவத அபராதம் செய்யாமல் இருந்ததால் கண்ணனை அடைந்தாள். (விடுத்து) – இராமாயணம் கூறுவது போன்று – தருணௌ ரூபஸம்பந்நௌ – மிகவும் அழகாக உள்ளனர் – என்று இவர்களது மேன்மையைக் கூறியபடியே கரனின் கால்களில் சென்று விழும்படி செய்தனர் (கரன் என்பவன் சூர்ப்பணகையின் சகோதரன்).

(அவட்கு மூத்தோனை) – அநுகூலரானார் பக்கல் ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் ராகம் பலிக்குமாபோலே காணும், ப்ரதிகூலரானார் பக்கல் ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் த்வேஷம் பலிக்கும்படி. (வெங்நரகம் சேரா வகையே சிலை குனித்தான்) – வளைந்த வில்லுங்கையுமாய் முஷ்டியிலே நின்ற பெருமாளைக்கண்ட கரன் மேலே போய் ஒரு நரகானுபவம் பண்ண வேண்டா என்னும்படி வயிறெரித்தலோடே எல்லாவனுபவமும் இங்கே அனுபவிக்கும்படி பண்ணினான். பூர்வாச்ரமத்திலே நஞ்சீயரெழுந்தருளியிருக்கச்செய்தே திருமடலருளிச் செய்கிறபோது – பட்டர் இவ்விடத்துக்கு இவ்வார்த்தை அருளிசெய்தார் – என்று சொல்ல, – இவ்வார்த்தையருளிச்செய்தவரைக் காணவேணும் – என்று காணும் பட்டர் ஸ்ரீபாதத்தில் நஞ்சீயர் ஆச்ரயித்தது.

விளக்கம் – (அவர்க்கு மூத்தோனை) – தன்னிடம் அன்பு கொண்டவர்கள் விஷயத்தில் அவனுடைய உறவினர்கள், உறவினர்கள் என்று தொடர்ந்து பல ஸந்ததிகளிடம் எம்பெருமானுக்கு அன்பு ஏற்படுகிறது. அதே போன்று தன்னிடம் அன்பு இல்லாதவர்களிடம் அவர்கள் உறவினர்கள், அவர்கள் உறவினர்கள் என்று பல ஸந்ததிகளிடம் பகவானுக்குக் கோபம் ஏற்படுகிறது. (வெங்நரகம் சேரா வகையே சிலை குனித்தான்) – வளைந்தவில்லும் கையுமாய் நின்ற இராமனைக் கண்ட கரனுக்கு அதற்கு மேல் அனுபவிக்க வேண்டிய நரகம் ஒன்றும் இல்லை என்று கூறும்படி, அனைத்துத் துயரங்களையும் இங்கேயே அனுபவித்தான். நஞ்ஜீயர் ஒருமுறை பட்டரின் சிஷ்யர் ஒருவரிடம் – இந்த இடத்தில் பட்டர் எந்த முறையில் விளக்கம் அளித்திருப்பார்? – என்று கேட்டார். அதற்கு அந்த சிஷ்யர் – மேலே கூறியபடி இராமனை வில்லும் கையுமாகக் கண்ட கரன் நரகத்தை இங்கேயே அனுபவித்தான் என்பது பட்டர் அருளிச்செய்த கருத்தே ஆகும் – என்றார். இதனைக் கேட்ட நஞ்ஜீயர் – இப்படிப்பட்ட பட்டரை நான் உடனே காண வேண்டும் – என்று கூறி பட்டரின் திருவடிகளில் விழுந்தார்.

(செந்துவர்வாய் இத்யாதி) – கரவதத்தினன்று, போய்ச்சொல்லுகைக்கு ஆளில்லாதபடி அகம்பநனொருவன் தப்பிப் பெண்ணுடையுடுத்துப்போய், ராவணனுக்கு பிறந்த வ்ருத்தாந்தத்தை அறிவிக்க, அவர் மாரீசனையுங் கூட்டிக்கொண்டுவந்து பிராட்டியையும் பெருமாளையும் கடலுக்கு அக்கரையும் இக்கரையுமாக உடலையும் உயிரையும் பிரித்தாற்போலே பிரிக்க, அதுவே ஹேதுவாக ராவணனை நிரஸித்தபடி சொல்லுகிறது மேல்.

விளக்கம் – (செந்துவர்வாய் இத்யாதி) – கரன் கொல்லப்பட்ட விஷயத்தை இராவணனிடம் சென்று கூறுவதற்குக் கூட ஆள் இல்லை. அதனால் அகம்பனன் ஒருவனே பெண் போன்று ஆடை அணிந்து, இராமனிடம் இருந்து தப்பி, இராவணனிடம் சென்று இந்த விஷயத்தைத் தெரிவித்தான். உடனே இராவணன் மாரீசனைக் கூட்டி வந்தான். உடலையும் உயிரையும் பிரித்தது போன்று கடலுக்கு அக்கரையும் இக்கரையுமாக, இராமனையும் சீதையையும் பிரித்தான். இந்தச் செயலே இராவணனை அழிக்கக் காரணமாக உருவெடுத்த விதத்தை இனி கூறுகிறார்.

(செந்துவர்வாய்) – ஜகத் ஸசைலம் பரிவர்த்தயாமி – நாட்டிற்குத் தண்ணீர்ப்பந்தல்போலே ரக்ஷகராகக் கண்ட பெருமாள் – நாட்டையழிப்பன் – என்னப்பண்ணின முறுவலிறே. புரேவ மே சாருததீமநிந்திதாம் – மானைக்கண்ட போது – பெருமாளே. இம்மானைப் பிடித்துத் தரவேணும் – என்று இரப்போடே கூடின முறுவலோடே காட்டார்களாகில் லோகத்தையெல்லாம் கூட்டிக் குலையாக அறுத்துப் போகவிடுவன் என்றாரிறே. (வாரார் வனமுலையாள்) – மலராள் தனத்துள்ளான் என்று பெருமாள் கிடக்குமிடமிறே. (வைதேவி) – விதேஹஸுதாம் என்று பெருமாள் வாய்புலற்றுங் குடிப்பிறப்பிறே. (காரணமா) – அவள் ஹேதுவாக. (ஏரார் தடந்தோளிராவணனை) – ஒன்றுக்கும் விக்ருதனாகாத திருவடியும் அஹோ ரூபமஹோ தைர்யம் என்று விக்ருதனாம்படி வடிவுபடைத்தவனிறே ராவணன். (ஈரைந்து சீரார்சிரமறுத்து) – பத்துத்தலையையும் ஒருகாலே அறாதே ஐயைந்தாக அறுத்து லீலைகொண்டாடினபடி. (சீரார் சிரமறுத்து) – அறுப்புண்டு விழுகிற தலைகளும் ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை: என்று பெருமாள் வீரப்பாட்டைக்கண்டு சிரித்துக்கொண்டு விழுகிறபடி. அறுப்புண்டு விழுந்த தலைகளைக் கழுகும் பருந்தும் இசிக்கக்கண்டு நிற்கிற தலைகள் – நாம் முற்பாடராகப் பெற்றிலோம் – என்றாசைப்படுகிறபடி. (செற்று) – வந்தானை ஓரம்பாலே கொல்லாதே, சதுரங்கபலத்தைக் கொன்று குதிரைகளைக் கொன்று ஸாரதியைக் கொன்று

தேரையழித்துக் கொடியையறுத்து தலையைச் சிரைத்துத் தோள்களைத் துணித்துத் தலைகளையறுத்து இவற்றையெல்லாங்கண்டு அவன் நெஞ்சாறல் படும்படி பண்ணி, பின்னை அவனைக் கொன்றபடி. (உகந்து) – ருஷிகளுக்குக் களையறுக்கப் பெற்றோம் என்றும், ஸ்ரீவிபீஷணாழ்வான் தலையிலே அபிஷேகம் பண்ணப்பெற்றோம் என்றும் உகந்த. (செங்கண்மால்) – ஆஸ்ரித விரோதிகளைப்போக்கி, அவர்களுக்கு உகப்பாகப் பெற்றோம் என்று வ்யாமோஹமும் வாத்ஸல்யமும் திருக்கண்ணிலே தோற்றினபடி.

விளக்கம் – (செந்துவர்வாய்) – இராமாயணம் (ஆரண்ய காண்டம்) – ஜகத் ஸ சைலம் பரிவர்த்தயாமி – சீதையை மீண்டும் என்னிடம் சேர்க்கவில்லை என்றால் இந்த உலகைத் தலைகீழாகக் கவிழ்த்து விடுவேன் – என்று, உலகிற்கே தண்ணீர்ப்பந்தல் போன்று காப்பாற்றும் இராமன், நாட்டை அழிப்பதாகக் கூறும்படிச் செய்தது சீதையின் புன்னகை அல்லவா? மானைக்கண்டபோது என்னிடம் (இராமன்) – பெருமானே. இந்த மானைப் பிடித்துத் தரவேண்டும் – என்று அப்பாவியாகக் கேட்ட சீதையின் புன்னகையை எனக்குக் காண்பிக்கவில்லை என்றால் இந்த உலகம் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து, வாழைக்குலை போல் அறுத்து விடுவேன் – என்றான் அல்லவா? (வார் ஆர் வனமுலையாள்) – மூன்றாம் திருவந்தாதி (3) கூறுவது போன்று – மலராள் தனத்துள்ளான் – என்பதற்கு ஏற்ப இராமன் உள்ள இடமாகும் இவளது ஸ்தனங்கள். (வைதேவி) – விதேஹ ஸுதாம் – என்று இராமனும் பிரமிக்கும் குடிப்பிறப்பைக் கொண்டவள் அல்லவா? (காரணமா) – இத்தகைய பெருமை நிறைந்த அவள் காரணமாக. (ஏரார் தடம் தோள் இராவணனை) – இராமனையும் சீதையையும் தவிர வேறு யாரையும் மதிக்காத அனுமன் – அஹோ ரூபம் அஹோ தைர்யம் – என்ன ஒரு உருவம், என்ன தைர்யம் – என்று வியக்கும்படியான உருவம் கொண்ட இராவணன். (ஈரைந்து சீரார் சிரம் அறுத்து) – அவனுடைய பத்துத் தலைகளையும் ஒரே நேரத்தில் அறுத்து எறிந்தால், தான் (இராமன்) அவன் தலையை அறுப்பதை அவனால் (இராவணால்) கண்டு ரசிக்க முடியாது என்று கருதி, ஐந்து ஐந்து ஆக அறுத்தான். (சீரார் சிரம் அறுத்து) – அப்படி அறுந்து விழும் தலைகள் – ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை: – வீரச் செயல்களால் புகழத்தக்கவனான இராமனை – என்று இராமனுடைய வீரத்தைக் கண்டு சிரித்தபடியே தரையில் விழுந்தன. அறுந்து விழுந்த தலைகளைக் கழுகும் பருந்தும் உண்பதைக் கண்டு, எஞ்சி இருந்த மற்ற தலைகள் – நாம் முன்னரே விழுந்திருக்கலாமே – என்று ஆசையுடன் நின்றன. (செற்று) – இராவணனை ஓர் அம்பினால் கொல்லாமல், நான்கு அங்கங்கள் கொண்ட சேனையை அழித்து, குதிரைகளைக் கொன்று, தேர்ப்பாகனைக் கொன்று, தேரை அழித்து, தேர்க்கொடியை அறுத்து, தலை முடியைச் சிரைத்து, தோள்களை வெட்டி, தலைகளை அறுத்து, இவை அனைத்தும் கண்ட இராவணன் மனவேதனை அடையும்படிச் செய்து, அவனைக் கொன்றான். (உகந்த) – முனிவர்களின் துன்பத்தை அறுத்தோம் என்றும், விபிஷணனின் தலையிலே முடி சூட்டினோம் என்றும் மகிழ்ந்த. (செங்கண்மால்) – நமது அடியார்களின் விரோதிகளை அழித்து, அவர்களுக்கு மகிழ்வு உண்டாகினோம் என்ற சிந்தனை காரணமாக அன்பும், வாத்ஸல்யமும் திருக்கண்களில் தோன்றியபடி.

திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

நம்பெருமாள் திருவடிகளே தஞ்சம்

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த

திருமாலை
(பகுதி – 1)

திருவரங்கப்பெருமாளரையர் அருளிச்செய்த தனியன்

மற்றொன்றும் வேண்டா மனமே மதிள் அரங்கர்
கற்றினம் மேய்த்த கழல் இணைக் கீழ் – உற்ற
திருமாலை பாடும் சீர்த் தொண்டரடிப்பொடி எம்
பெருமானை எப்பொழுதும் பேசு.

பொருள் – என்னுடைய மனமே. திருவரங்கத்தில் பொன் போன்ற மதிள்களால் சூழப்பட்ட பெரியகோயிலில் கண்வளர்பவனும், பசுக்களை மேய்த்தபடி இருந்தவனும் ஆகிய பெரியபெருமாளின் இரண்டு பொருந்திய திருவடிகள் மீது ஆழ்ந்த பக்தி கொண்டவர், அந்த பக்தி மேம்பட திருமாலை என்னும் பிரபந்தம் அருளிச்செய்தவர், உயர்ந்த கல்யாண குணங்கள் நிறைந்தவர், தொண்டரடிப்பொடி என்று அழைக்கப்படுபவர் – இப்படிப்பட்ட எங்கள் ஸ்வாமியான ஆழ்வாரை மட்டுமே நீ எண்ணியபடி இருப்பாயாக, வேறு எந்த புருஷார்த்தமும் அவசியம் இல்லை.

பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த தனியன் வ்யாக்யானம்

அவதாரிகை

இதில் மநஸ்ஸைக் குறித்து, பகவத்விஷயத்தில் வாசிகமாக அடிமை செய்த ஆழ்வார் திருநாமத்தை நிரந்தரானுஸந்தாநம் பண்ணும்படி சொல்லுகிறது.

விளக்கம் – இந்தத் தனியனில், திருவரங்கன் விஷயமாக ப்ரபந்தம் அருளிச்செய்து, தன்னுடைய வாக்கு மூலமாகவே அவனுக்கு அடிமையாக நின்ற தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருநாமத்தை எப்போதும் சிந்தித்தபடி இருக்குமாறு தனது மனதிற்குக் கூறுகிறார்.

வ்யாக்யானம்

(மற்றொன்றும் வேண்டா மனமே) – என்று சிந்தை மற்றொன்றின் திறத்தல்லா என்கிறபடியே, இங்கு மற்றொன்றும் என்று பரதத்வாதிகளின் பேரைப் பற்றச் சொல்லுகிறதாதல், புருஷார்த்தாந்தரங்களைப் பற்றச் சொல்லுகிறதாதல். மற்றொன்றும் வேண்டா என்று ப்ரியஹிதங்களுக்கு உறுப்பாக வேறொன்றும் வேண்டா என்கிறது. (மனமே) – பந்தமோக்ஷங்கள் இரண்டுக்கும் பொதுவான மனஸ்ஸே. அந்தப் பொதுவான ஆகாரத்தைக் குலைத்து, அதில் ஒன்றையே என்றும் அனுபவிக்கப்பார்.

விளக்கம் – (மற்றொன்றும் வேண்டா மனமே) – நம்மாழ்வார் திருவாய்மொழியில் (7–10–10) – சிந்தை மற்றொன்றின் திறத்தல்லா – என்றார், அதாவது அர்ச்சாவதாரத்தில் ஈடுபட்ட நம்மாழ்வார் பரவாஸுதேவனின் திருநாமத்தைக் கூறவும் விரும்பாமல், மற்றொன்று என்றார். அது போன்று இவரும், ஐந்து நிலைகளைக் கூறவும் விரும்பவில்லை (ஐந்து நிலைகள் – பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சை), அதனால் மற்றொன்று என்றார். அடுத்து அனைத்து புருஷார்த்தமும்

கழிக்கும்படிக் கூறுகிறார். இனிமையை ஏற்படுத்தவல்ல பகவத் கைங்கர்யம் மற்றும் பகவத் அனுபவத்தையும் கழித்தார். (மனமே) – ஸம்ஸாரபந்தம் மற்றும் மோக்ஷம் ஆகிய இரண்டிற்கும் பொதுவான மனமே. இவ்விதம் இரண்டிற்கும் பொதுவாக உள்ள உனது நிலையை மாற்றிக்கொண்டு, மோக்ஷம் பெறுவதற்கான வழியை ஆராய்வாயாக என்றார்.

அதென்னென்னில் (மதிளரங்கர் கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ் உற்ற திருமாலை பாடும் சீர்த் தொண்டரடிப்பொடி எம்பெருமானை எப்பொழுதும் பேசு) என்கிறது. (மதிளரங்கர்) – மதிள் திருவரங்கத்தானே என்று இவர் பேசும்படி திருமங்கையாழ்வார் கட்டின மதிளையிட்டு நிரூபிக்கும்படியான கோயிலையுடையவர். ஆயபொன்மாமதிள் சூழ்ந்தழகார் தென்னரங்கமே என்று அவர்தாமும் அருளிச்செய்தார். திண்கொடி மதிள்சூழ் திருவரங்கத்தாய் என்னும்படியான அரங்கர்.

விளக்கம் – அது என்ன வழி? திருவரங்கன் விஷயமாகத் திருமாலை என்னும் பிரபந்தம் அருளிச்செய்த தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் திருநாமத்தைக் கூறி, அதன் மூலமே மோக்ஷம் கிட்டும் காரணம் காண்பாயாக என்றார். (மதிளரங்கர்) – திருமாலையில் (42) – மதிள் திருவரங்கத்தானே – என்று கூறியபடி, திருமங்கையாழ்வரால் கட்டப்பட்ட மதிள் சுவர் கொண்டே நிரூபிக்கப்பட வேண்டிய திருவரங்கத்தைக் கொண்டவர். திருமங்கையாழ்வாரும் பெரியதிருமொழியில் (5–4–9) – ஆயபொன்மதிள் சூழ்ந்தழகார் தென்னரங்கமே என்றார். திருவாய்மொழியில் (7–2–3) – திண்கொடி மதிள்சூழ் திருவரங்கத்தாய் – என்னும்படியாக உள்ள ஸ்ரீரங்கநாதன்.

(கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ் உற்ற திருமாலை பாடும்) – அதாவது, கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை என்று உபக்ரமித்து, மழைக்கன்று வரைமுனேந்தும் என்றும், வளவெழுந்தவளமாட மதுரைமாநகரந்தன்னுள், கவளமால் யானை கொன்ற கண்ணனை அரங்கமாலை, துளபத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடிசொல் என்றும், அவதாரத்தோடே கூட அரங்கமாலை அனுஸந்தித்துத் தலைக்கட்டிற்று. அதிலே தேங்கின மடுவிறே அர்ச்சாவதரம். விக்ரஹைகதேசமான திருவடிகளைச் சொன்னது விக்ரஹத்துக்கும் உபலக்ஷணம். அழகிய பைம்பொன் இத்யாதி. பெரியபெருமாள் திருவடிகளை ஸேவித்தவாறே, கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை என்னும் ஆகாரம் தோற்றியிருக்கும். அதாவது கன்றின்பின் போன சிறுக்குட்டச் செங்கமல அடியம் வெதும்பி உன்கண்கள் சிவந்தாயசைந்திட்டாய் நீ எம்பிரான் என்று வடிவிலே தொடை கொள்ளலாம்படியாயிருக்கும். காவிரித் தென்னரங்கம் மன்னியசீர் மதுசூதனா உன்னையிளங்கன்று மேய்க்கச் சிறுகாலேயூட்டி யொருப்படுத்தேன் என்றும், காவிரித் தென்னரங்கன் பண்டவன் செய்த கிரீடை என்றுமிறே பட்டர்பிரான் அருளிச்செய்தது. வண்டினங்கள் ஆலிக்குஞ்சோலை அரங்கத்தரவணையான் காலிப்பின் போன கழல் என்னக்கடவதிறே. திருக்கைகளைக் கண்டவாறே, மழைகன்று வரைமுனேந்தும் கொடியேறு செந்தாமரைக்கை என்னலாயிருக்கும். குன்றமேந்திக் கோநிரை காத்தவன் என்னும் ஆயனாய் அன்று குன்றமொன்றெடுத்தான், அரங்கமாநகரமர்ந்தானிறே. திருமுகமண்டலத்தைக் கண்டவாறே வெண்ணெயுண்டவாயன் என்று கவ்யஸேவை பண்ணின ஆகாரம் தோற்றியிருக்கும். பாவத்ரயமும் இப்படி ஸர்வசேதந ஸம்ரக்ஷண ஸமர்த்தங்களாயிருக்கும். கேயத்தீங்குழலூதிற்றும் நிரைமேய்த்ததும், நீடுலகுண்ட திறங்கிளர்வாய், வையமேழுங்கண்டாள் பிள்ளைவாயுள், முற்றுமுண்டகண்டமிறே. வாயிலும் வயிற்றிலும் வைத்திறே நோக்குவது.

விளக்கம் – (கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ் உற்ற திருமாலை பாடும்) திருமாலையில் (9) – கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை என்று தொடங்கினார். பாசுரம் 36ல் – மழைக்கன்று வரைமுனேந்தும் என்று கூறி, பாசுரம் 45ல் – வளவெழுந்தவளமாட மதுரைமாநகரந்தன்னுள், கவளமால் யானை கொன்ற கண்ணனை அரங்கமாலை, துளபத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடிசொல் என்று இவ்விதம் திருவரங்கத்தில் கண்வளரும் அழகியமணவாளனை கண்ணனாகவே மனதிற்கொண்டு தன்னுடைய பிரபந்தத்தை பூர்த்தி செய்தார். ஸ்ரீவசனபூஷணத்தில் (39) கூறிய – அதிலே தேங்கின மடுவிறே அர்ச்சாவதரம் – என்பதற்கு ஏற்ப அர்ச்சையில் உள்ள விக்ரஹங்களை விபவ அவதாரங்களுடன் கூறுவது வழக்கம் அல்லவா? அடுத்து திருமேனியின் ஒரு உறுப்பான திருவடிகளைக் கூறுதல் என்பது, அவனது முழு திருமேனியையும் கூறுவது

போன்றே ஆகும். பெரியாழ்வார் (1–2–20) – அழகிய பைம்பொன் – என்னும் பாசுரத்தில் அவன் கற்றினம் மேய்ப்பதைக் கூறியது காண்க. பெரியபெருமாளின் திருவடிகளை பார்க்கும்போது – கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை – என்னும்படி மாடுகளின் பின்னே சுற்றிய திருவடி இதுவே என்று தோன்றும். பெரியாழ்வார் கூறியபடி (3–3–4) – கன்றின்பின் போன சிறுக்குட்டச் செங்கமல அடியம் வெதும்பி உன் கண்கள் சிவந்தாயசைந்திட்டாய் நீ எம்பிரான் – என்பதற்கு ஏற்ப கன்றுக்குட்டிகளின் பின்னே சென்ற களைப்பு காரணமாக சிவந்த திருவடிகளுடன் கண்ணும் சிவந்ததா – என்று கேட்கும்படியாக பெரியபெருமாள் சயனித்துள்ளான். பெரியாழ்வார் (3–3–2) – காவிரித் தென்னரங்கம் மன்னியசீர் மதுசூதனா உன்னை இளங்கன்று மேய்க்கச் சிறுகாலேயூட்டி ஒருப்படுத்தேன், (2–9–11) – காவிரித் தென்னரங்கன் பண்டவன் செய்த கிரீடை – என்று பெரியபெருமாளே கண்ணனாக ஆநிரை மேய்த்தான் என்று கூறினார் அல்லவா? பெரியபெருமாளின் நீண்ட திருக்கைகளைக் கண்டவுடன் திருமாலையில் (36) – மழைக்கு அன்று வரை முன் ஏந்தும் – என்றும், பெரியாழ்வார் திருமொழி (3–5–10) – கொடியேறு செந்தாமரைக்கை – என்றும் கூறியபடி கண்ணனின் திருக்கரமாகவே அல்லவோ தோன்றுகிறது? திருவாய்மொழியில் (7–2–8) – குன்று ஏந்திக் கோநிரை காத்தவன் – என்றும், பெரிய திருமொழியில் (5–7–9) – ஆயனாய் அன்று குன்றம் ஒன்று எடுத்தான் அரங்கமாநகர் அமர்ந்தானே – என்றும் அருளிச்செய்யப்பட்டது காண்க. இவனுடைய திருமுகத்தைக் காணும்போது அமலனாதிபிரானில் (10) – வெண்ணெய் உண்ட வாயன் – என்று கூறப்பட்டது போன்று, அந்தக் கண்ணன் இவனே என்பது வெளிப்படும். இப்படியாக இவனது திருவடிகள், திருக்கரங்கள் மற்றும் திருமுகம் ஆகியவற்றைக் காணும்போது, அனைத்தையும் கரையேற்றவல்ல கண்ணன் இவனே என்பது புலப்படும். திருவாய்மொழி (6–4–2) – கேயத்தீங்குழலூதிற்றும் நிரைமேய்த்ததும், திருவாய்மொழி (6–6–3) – நீடுலகுண்ட திறங்கிளர்வாய், பெரியாழ்வார் திருமொழி (1–1–6) – வையம் ஏழும் கண்டாள் பிள்ளைவாயுள், அமலனாதிபிரான் (6) – முற்றுமுண்டகண்டம் – என்று அருளிச்செய்தபடி அனைத்தையும் இவன் தனது வாயிலும் வயிற்றிலும் வைத்து அல்லவோ காக்கிறான்?

(கற்றினம் மேய்த்த கழலிணைக் கீழுற்ற திருமாலை பாடும்) – ஆஶ்ரிதரக்ஷணத்துக்குறுப்பாய், அதிஸுலபமான திருவடிகளுக்கு ஒக்கும்படியான அதிலே ஊன்றி அடிபட்டு, அடிசூட்டலாகுமந்தாமம் என்னும்படி அரங்கமாலுக்கும் திருமாலையைப்பாடித் திருவடிகளிலே சூட்டும். செய்ய சுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை என்னக்கடவதிறே. (பாடும் சீர்) – பாடுகைதானே இவர்க்கு ஸ்ரீயாய்த்து. (சீர்த்தொண்டரடிப்பொடி) – துளபத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடியிறே. (தொண்டரடிப்பொடி எம்பெருமானை) – அவர்க்கு அரங்கநகர் எம்பிரான் என்னும்படி, இலங்கையர்கோன் வழிபாடுசெய் கோயிலெம் பெருமான் நம்பெருமாளாயிருப்பர், இங்கு தொண்டரடிப்பொடி எம்பெருமானாயிருக்கும். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு சேஷபூதரான ஆகாரத்தாலே நமக்கு நாதராயிருப்பர். இப்படி நமக்கு ஸ்வாமியானவரை எப்போதுமீதே சொல் என்கிறபடியே ஸர்வகாலத்திலும் அனுஸந்தித்துப்போரு. இத்தால் குரோர் நாம ஸதா ஜபேத் என்னும் அர்த்தம் சொல்லிற்று.

விளக்கம் – (கற்றினம் மேய்த்த கழலிணைக் கீழுற்ற திருமாலை பாடும்) – தன்னை அண்டியவர்களைக் காப்பதும், அனைத்திற்கும் அடைவதற்கு மிகவும் சுலபமாக உள்ளதும் ஆகிய திருவடிகளில் ஈடுபாடு கொண்டு, அதிலேயே மனம் ஊன்றி அடிபட்டு நிற்கிறார், திருவாய்மொழி கூறியபடி (2–4–11) – அடிசூட்டலாகுமந்தாமம் – என்று திருவரங்கத்தில் சயனித்துள்ளவனின் திருவடிகளில் தன்னுடைய திருமாலையைச் சூட்டினார். சொற்களால் மாலை சூட்டுவார்களோ என்றால், முதல் திருவந்தாதியில் (1) – செய்ய சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொல் மாலை – என்றார் அல்லவா? (பாடும் சீர்) – பாடுவது என்பதே இவர் பெற்ற செல்வம் ஆனது (சீர்த்தொண்டரடிப்பொடி) – துளபத்தொண்டாய தொல் சீர்த்தொண்டரடிப்பொடி என்று இவரே கூறியது காண்க. (தொண்டரடிப்பொடி எம்பெருமானை) – குலசேகராழ்வாருக்கு பெருமாள் திருமொழியில் (3–6) கூறியபடி – அரங்கநகர் எம்பிரான் – என்பது போன்று, தொண்டரடிப்பொடியாழ்வாருக்கு திருப்பள்ளியெழுச்சியில் (5) கூறியது போன்று – இலங்கையர்கோன் வழிபாடு செய் கோயில் எம்பெருமான் – என்று நம்பெருமாள் ஸ்வாமியாக இருப்பான், இவருக்கோ (திருவரங்கப்பெருமாளரையருக்கு) தொண்டரடிப்பொடியாழ்வார் ஸ்வாமியாக இருப்பார். நாம் தொண்டர்களுக்குத்

தௌண்டராக உள்ளதால், நமக்கும் ஸ்வாமியாக ஆழ்வார் உள்ளார். இவ்விதம் உள்ள ஆழ்வாரை, பெரியதிருவந்தாதி கூறுவதுபோன்று (87) – எப்போதும் இதே சொல் – என்று எந்தக்காலத்திலும் ஆழ்வார் திருநாமத்தையே கூறும்படி தன் மனதிடம் சொல்கிறார். இதன் மூலம் – குரோர் நாம ஸதா ஜபேத் – ஆசார்யனின் திருநாமத்தை எப்போதும் கூறியபடி இருக்கவேண்டும் – என்பது உணர்த்தப்பட்டது.

பிள்ளைலோகம் ஜீயர் இயற்றிய தனியன் வ்யாக்யானம் சுபம்

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்

பரமகாருணிகரான
ஸ்வாமி பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்த
வ்யாக்யான அவதாரிகை

நித்யஸூரிகளோடொத்த ப்ராப்தி தமக்கு உண்டாயிருக்க அத்தை அறியாதே, அநாதிகாலம் தேஹமே ஆத்மா என்றும், சப்தாதி விஷயங்களே போக்யமென்றும் விரும்பி, ஸம்ஸாரத்தில் கைகழிந்த ஆழ்வாரை, பெரியபெருமாள் தம்முடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளுக்கு வாசகமான திருநாமப்ரபாவத்தை நிர்ஹேதுகமாகக் காட்டியருளக் கண்டு, தாமும் அனுபவித்து, அனுபுபூஷுக்களையும் அனுபவிப்பிக்கவும் வல்லராய்ப் பெரியபெருமாளையும் உகப்பித்துத் தலைக்கட்டுகிறார்.

விளக்கம் – நித்யசூரிகள் போன்று எப்போதும் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்தபடி உள்ள உரிமை இந்த ஆழ்வாருக்கு இருந்தபோதிலும், அதனை உணராமல் – இந்த உடலே ஆத்மா என்றும், உலகவிஷயங்களே இன்பம் அளிப்பவை என்றும் இருந்தார். இதனால் எம்பெருமானை விட்டு விலகி, ஸம்ஸாரத்தில் தனது காலத்தைக் கழித்தபடி இருந்தார். இதனைக் கண்டு பொறுக்காத பெரியபெருமாள் அவருக்குத் தனது ஸ்வரூபம், ரூபம், திருக்கல்யாண குணங்கள், ஐச்வர்யங்கள் ஆகியவற்றைக் காட்டிக்கொடுக்கவல்ல திருநாமங்களின் மேன்மைகளை உணர்த்தினான். இதனை – ஆழ்வார் தன்னை அடைய எந்த உபாயமும் செய்யவேண்டிய அவசியம் இல்லாமல், அவரிடமிருந்து எதனையும் எதிர்பார்க்காமல் செய்தான். இதனைக் கண்டு ஆழ்வார் நன்றாக அவனை அனுபவித்தார். இதனை அனுபவிக்க விருப்பம் உள்ளவர்களையும் அனுபவிக்கும்படிச் செய்தார். இதன் மூலம் பெரியபெருமாளும் மகிழும்படிச் செய்தார். இப்படியாக தனது பிரபந்தத்தை நிறைவு செய்தார்.

ஸம்ஸாரிகளாகிறார் – ஐஹிகத்தில் புண்யபாபரூபமான கர்மங்களை ஆர்ஜித்தும், ஆமுஷ்மிகத்தில் ஸ்வர்க்கநரகங்களிலே அதினுடைய பலானுபவத்தைப் பண்ணியும் இப்படி கதாகதம் பண்ணித் திரிவார் சிலராய்த்து. அது தன்னிலும் புண்யபாபரூபமான கர்மங்களை ஸ்வர்க்கநரகங்களிலே அனுபவித்து, கர்மசேஷத்தோடே பூமியிலே கர்ப்பவாஸம் பண்ணுகைக்கு வரும் வழியிலே இவ்வாத்மா படும் எளிவரவை வேதாந்தத்திலே பஞ்சாக்நிவித்யையென்று ஒரு ப்ரதேசத்திலே ஓதிவைத்தது. அதாவது யாதநாசரீரத்தாலே நரகானுபவம் பண்ணி அச்சரீரத்தை அங்கே பொகட்டு, அநந்தரம் புண்யசரீரத்தைப் பரிக்ரஹித்து ஸ்வர்க்கானுபவம் பண்ணி, அங்கே அச்சரீரத்தைப் பொகட்டு, ஸூக்ஷ்ம சரீரத்தோடே நிராலம்பநமான ஆகாசத்திலே பதிக்கக்கடவன்.

விளக்கம் – ஸம்ஸாரிகள் என்ன செய்கிறார்கள்? இந்த உலகத்தில் உள்ளபோது புண்யபாவங்கள் நிறைந்த கர்மங்களை இயற்றியபடி உள்ளனர். இவற்றின் பலன்களை ஸ்வர்க்கத்திலும் நரகத்திலும் அனுபவிக்கின்றனர். பின்னர் மீண்டும் இங்கு வருகின்றனர். இப்படியே வருவதும் போவதுமாக உள்ளனர். இப்படியாக தங்கள் புண்யபாவ கர்மங்களை ஸ்வர்க்கத்திலும் நரகத்திலும் அனுபவித்த பின்னர், மீதம் உள்ள கர்மபலனுடன் பூமிக்கு வருகின்றனர். அவ்விதம் ஜீவன் மீண்டும் ஒரு கர்ப்பத்தில் புக தன்னுடைய பயணத்தைத் தொடங்கி, வரும் வழிகளில்

அனுபவிக்கும் வேதனைகளை சாந்தோக்ய உபநிஷத்தில் உள்ள பஞ்சாக்னி வித்யை மிகவும் தெளிவாகக் கூறுகிறது. நரகத்தில் கர்மபயனை அனுபவிக்க ஜீவனுக்கு யாதநாசரீரம் என்ற உடல் கிட்டுகிறது. அந்தக் கர்மபலன் முடிவுக்கு வந்த பின்னர், அந்த சரீரத்தை அங்கே நீக்கிவிட்டு, புண்யபலன் அனுபவிக்க வரும் ஸ்வர்க்கத்தில் வேறு ஒரு சரீரம் எடுத்துக்கொள்கிறான். புண்யபலன்களும் கழிந்த பின்னர், அந்த சரீரமும் விடப்படுகிறது. பின்னர் சூக்ஷமமான சரீரத்துடன் அந்த ஜீவன் பிடிப்பு இல்லாத ஆகாயத்தில் விழுகிறான்.

ஆதித்யன் தன் கிரணங்களாலே ஹிமவானின் ஹிமத்தை உபாதாநம் பண்ணி, அத்தாலே ஆகாசத்திலே மங்கிக் கிடக்கிற ஆத்மாவை க்ரஹித்து மேகத்திலே புகவிடக்கடவன். அங்கே அந்த ஹிமம் வர்ஷரூபேண வர்த்திக்குமளவும் கிடந்து, வர்ஷதாரைகளோடே பூமியிலே பதிக்கக்கடவன். அந்த ஜலம் ஸஸ்யத்துக்கு தாரகமாய்ப் புகுமளவிலே தத்த்வாரா ஸஸ்யத்திலே புகக்கடவன். அந்த ஸஸ்யம் பக்வமாய் அந்நரூபேண பரிணமிக்குமளவும் அங்கே கிடந்து, அந்நமானது புருஷசரீரத்திலே புகுந்து, சுக்லமாய்ப் பரிணமிக்குமளவும் செல்ல அங்கே கிடந்து, ஸ்திரீபுருஷ ஸம்யோகத்தாலே சுக்லத்வாரா ஸ்த்ரீசரீரத்திலே புகுந்து, பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தி என்கிறபடியே கர்ப்பமாய்ப் பரிணமிக்கக்கடவன். கர்ப்பவாஸம் பண்ணும்போது, அத்யம்லகடு தீக்ஷ்ணோஷ்ணலவணைர் மாத்ருபோஜநை: அதிதாபிபிரத்யர்த்தம் வர்த்தமாநாதி வேதந: என்கிறபடியே மாத்ருபோஜனத்தில் அந்தர்பூதங்களான க்ரூரத்ரவ்யங்களாலே தொடரிலிட்ட ஈயம்போலே துடியாநிற்கும்.

விளக்கம் – சூரியன் தன்னுடைய வெப்பம் மிகுந்த கதிர்கள் மூலமாக, பனிபடர்ந்த மலைகளில் உள்ள பனியை எடுக்கிறான். பனி படர்ந்த தனது கதிர்கள் மூலமாக, ஆகாயத்தில் மயங்கிக் கிடக்கும் ஆத்மாவை எடுத்து, மழைநீர் மிகுந்த மேகத்தில் வைக்கிறான். அந்த ஜீவனை பனிக்கதிர்கள் உட்கொள்கின்றன. அவை மழைத்துளியாக மாறுகின்றவரை, ஜீவன் மேகக்கூட்டத்தில் கிடக்கிறான். பின்னர் மழை பெய்யும்போது, மழைத்துளிகளுடன் பூமியில் அந்த ஜீவன் வந்து விழுகிறான். அந்த மழைநீரானது பயிர்களுக்கு உதவும்விதமாக, அந்தப் பயிர்களின் உள்ளே செல்கின்றன. அப்போது, அந்த நீருடன் ஜீவனும் பயிர்களில் நுழைகிறான். அந்தப் பயிரானது நன்கு செழித்து, நெல்லாக மாறும்வரை, ஜீவன் அந்தப் பயிருக்குள்ளேயே உள்ளான். அந்த நெல்லை அரிசியாக்கிச் சோறாக மனிதன் உண்ணும்போது, ஜீவன் அந்த மனிதனின் உடலில் புகுந்துவிடுகிறான். அந்த மனிதனின் உடலில் சுக்லம் எனப்படும் விந்துவாக மாறி அங்கேயே உள்ளான். அந்த மனிதன் ஒரு பெண்ணுடன் சேரும்போது, வெளிப்படும் விந்துவுடன் அந்த ஜீவனும் பெண்ணின் உடலில் புகுந்துவிடுகிறான். பின்னர் சாந்தோக்ய உபனிஷத் (5–9–1) கூறுவதுபோன்று – பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தி – ஐந்தாவது ஆஹுதியாக இடப்படும் நீர் புருஷன் எனப்படும் – என்பதற்கேற்ப, பெண்ணின் உடலில் புகுந்த ஜீவன் கர்ப்பமாக மாறுகிறான். அந்தக் கர்ப்பத்தில் உள்ள ஜீவன் எவ்விதம் துடிக்கிறான் என்பதை விஷ்ணுபுராணம் (6–5–11) – அத்யம்லகடுதீக்ஷ்ணோஷ்ணலவணைர் மாத்ருபோஜநை: அதிதாபிபிரத்யர்த்தம் வர்த்தமாநாதிவேதந: – புளிப்பு, துவர்ப்பு, காரம், சூடு, உவர்ப்பு போன்றவற்றுடன் கூடிய தாயின் உணவு உள்ளே செல்வதால் ஜீவன் துன்பம் அடைகிறான் – என்றது. அதாவது, தாயின் உணவினால், காய்ச்சப்படும் ஈயம் போன்று ஜீவன் துடிக்கிறான்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ர சிறப்புப் பகுதி

ஸ்ரீ திருப்பாணாழ்வாரின் திருநக்ஷத்ரம் கார்த்திகை ரோஹிணி (25.11.2007) ஆகும். அதற்கான சிறப்புப் பகுதியாக பெரியதிருமுடியடைவு என்ற நூலில் இருந்து திருப்பாணாழ்வார் பற்றிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன. இவை எளிதான தமிழிலேயே உள்ளதால் மேலும் விளக்கப்படவில்லை.

கோயில் கந்தாடைநாயன் அருளிச்செய்த பெரியதிருமுடியடைவு

ஸ்ரீவத்ஸாம்ச பூதரான திருப்பாணாழ்வாருக்குத் திருவவதார ஸ்தலம் சோழதேசத்தில் நம்பெருமாள் கோயில் ஸமீபத்திலே திருக்காவேரி தீரத்திலே உறையூர். திருவவதாரம் நெல்லுக்கதிரிலே அயோநிஸம்பவராய் (கர்ப்பம் மூலம் பிறக்காமல்) அவதரித்தார். ஐந்தாம் வர்ணத்திலே வளர்ந்தார். திருநக்ஷத்ரம் கலியுகம் நூற்றிருபது ஸம்வத்ஸரம் சென்ற பின்பு துர்மதி வருஷம் கார்த்திகை மாஸம் பூர்ணிமை புதன்கிழமை ரோஹிணி. திருநாமங்கள் திருப்பாணாழ்வார், பாண்பெருமாள், பாணர், யோகிவாஹனர், காயகஸார்வபௌமர், முனிவாஹனர். வித்யை கானவித்யை. ஆசார்யர் ஸேனைமுதலியார். திருவாராதனம் நம்பெருமாள். இருப்பிடம் உறையூர். சிஷ்யர் ஸாரங்கமுனி முதலானவர்கள். இவரருளிச்செய்த ப்ரபந்தம் அமலனாதிபிரான் பத்துப்பாட்டு. இவர் பாடின திருப்பதிகள் திருமலை, கோயில். இவர் ஐம்பது திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார்.

தனியன்

ஸ்ரீலோக ஸாரங்க மஹாமுநீந்த்ர
ஸ்கந்தாதிரூடம் கலயாமி நித்யம்
களங்கஹீநம் கமநீயபக்திம்
கவீச்வரம் காயகஸார்வபௌமம்

பொருள் – ஸ்ரீலோகஸாரங்கன் என்னும் முனிவரின் தோள்களில் எழுந்தருளியவரும், தோஷங்கள் அற்றவரும், பெரியபெருமாளிடம் அன்பு கொண்டவரும், கவிகளில் தலைவரும், பாடுபவர்களில் சிறந்தவரும் ஆகிய திருப்பாணாழ்வாரை நான் தொழுகிறேன்.

ஆபாத சூடம் அநுபூய ஹரிம் சயாநம்
மத்யே கவேரதுஹிது: முதிதாந்தராத்மா
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோ நிச்சிகாய மநவை முநிவாஹநம் தம்

பொருள் – எந்த ஒரு திருப்பாணாழ்வார், காவேரியின் நடுவில் கண்வளரும் பெரியபெருமாளை திருவடி தொடங்கி திருமுடிவரை அனுபவித்து, தனது திருக்கண்கள், அந்தப் பெருமாளைத் தவிர்த்து வேறு எந்த விஷயங்களையும் காணாது என்று உறுதியாகக் கூறினாரோ – அப்படிப்பட்டவரும், லோகஸாரங்கன் என்ற முனிவனைத் தனது வாகனமாகக் கொண்டவரும் ஆகிய திருப்பாணாழ்வாரை நான் எப்போது சிந்திக்கக் கடவேன்.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ திருமங்கையாழ்வார் திருநக்ஷத்ர சிறப்புப் பகுதி

ஸ்ரீ திருமங்கையாழ்வாரின் திருநக்ஷத்ரம் கார்த்திகையில் கார்த்திகை (24.11.2007) ஆகும். அதற்கான சிறப்புப் பகுதியாக பெரியதிருமுடியடைவு என்ற நூலில் இருந்து திருமங்கையாழ்வார் பற்றிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன. இவை எளிதான தமிழிலேயே உள்ளதால் மேலும் விளக்கப்படவில்லை.

கோயில் கந்தாடைநாயன் அருளிச்செய்த பெரியதிருமுடியடைவு

சார்ங்காம்ச பூதரான திருமங்கையாழ்வாருக்குத் திருவவதார ஸ்தலம் சோழதேசத்தில் திருக்காவேரி ஸாகரஸங்கம ப்ரதேசத்திலே (காவேரி கடலுடன் கலக்கும் இடத்தில்) திருக்குறையலூர். திருநழத்ரம் கலியுகம் இருநூற்றேழு ஸம்வத்ஸரம் சென்ற பின்பு நளஸம்வத்ஸரம் கார்த்திகை மாஸம் வியாழக்கிழமை க்ருத்திகை நக்ஷத்ரம் பூர்ணிமை. திருவவதாரம் சதுர்த்த வர்ணத்திலே. திருநாமங்கள் பரகாலன், கலியன், கலித்வம்ஸன், கவிலோகதிவாகரன், சதுஷ்கவிசிகாமணி, ஷட்ப்ரபந்தகவி, கலிவைரி, நீலன், நாலுகவிப்பெருமாள், திருநாவீறுடையபெருமாள், மங்கையர்கோன், ஆலிநாடன், அருள்மாரி, திருமங்கையாழ்வார், அரட்டமுகி, அடையார்சீயம், கொங்குமலர்க்குழலியர்வேள், கொற்றவேந்தன், கொற்றவேல் மங்கைவேந்தன். தேவியார் குமுதவல்லி நாச்சியார். ஆசார்யர் ஸேனைமுதலியார். திருவாராதனம் சிந்தனைக்கினியார். மந்த்ரோபதேசம் பண்ணினவர் அழகியமணவாளப்பெருமாள். கைங்கர்யம் ப்ரதிதினமும் திருமங்கை மடத்தில் குமுதவல்லி நாச்சியார் புருஷகாரமாக ஆயிரம் திருநாமத்துக்குத் ததீயாராதனம். இவர் சிஷ்யர்கள் மைத்துனன் இளையாழ்வார், பரகால சியக்யர், நீர்மேல் நடப்பான், தாளூதுவான், தோராவழக்கன், நிழலில்மறைவான், உயரத்தொங்குவான். இவர் ஏறுங்குதிரை ஆடன்மா. இவரருளிச்செய்த ப்ரபந்தங்கள் பெரியதிருமொழி ஆயிரத்தெண்பத்துநாலு பாட்டும், திருக்குறுந்தாண்டகம் இருபது பாட்டும், திருநெடுந்தாண்டகம் முப்பது பாட்டும், சிறிய திருமடல் நூற்றுப்பதினாறு பாட்டும், பெரிய திருமடல் இருநூற்றெண்பத்தாறு பாட்டும், திருவெழுகூற்றிருக்கை ஒரு பாட்டும், தொங்கல் மூன்று பாட்டும். இவர் பாடின திருப்பதிகள் – தஞ்சைமாமணி வம்புலாஞ்சோலை, திருப்பிரிதி, திருவதரி, சாளக்கிராமம், நைமிசாரண்யம், அயோத்தி, திருவாய்ப்பாடி, வடமதுரை, கங்கைகரைக்கண்டம், வியன்புரிசை, சிங்கவேள்குன்றம், திருமலை, திருவெவ்வுளூர், திருவல்லிக்கேணி, திருநீர்மலை, திருக்கடல்மல்லை, திருநின்றவூர், திருவிடவெந்தை, பெருமாள் கோயிலிலே அஷ்டபுஜம், பரமேச்வர விண்ணகரம், பச்சைவண்ணர், பவளவண்ணர், கள்வர், கச்சிவேளுக்கையாளரி, திருவூரகம், திருப்பேரகம், திருப்பாடகம், திருப்பாற்கடல், நிலாத்திங்கள் துண்டம், திருவெஃகா, விளக்கொளி அத்தியூரான், நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான் கார்வானம், பேரருளாளர், திருக்கோவலூர், திருவயிந்திரபுரம், திருசித்திரகூடம், சீராம விண்ணகர், திருவாலி திருநாகரி, திருக்குறையலூர், திருநாங்கூரிலே மணிமாடக்கோயில், வைகுந்த விண்ணகரம், அரிமேய விண்ணகரம், திருத்தேவனார்தொகை, வண்புருடோத்தமம், செம்பொன் செய்கோயில், திருதெற்றியம்பலம், பார்த்தன்பள்ளி, திருவிந்தளூர், திருக்குடந்தை, திருவெள்ளியங்குடி, புள்ளம்பூதங்குடி, ஆதனூர், திருக்கூடலூர், திருவெள்ளறை, கோயில் திருவரங்கம், உறையூர், உத்தமர்க்கோயில், திருத்தண்காலூர், திருப்பேர், நந்திபுரவிண்ணகரம், திருவிண்ணகரம், திருநறையூர், திருக்கண்டியூர், திருமெய்யம், தஞ்சையாளி, திருச்சேறை, சிறுபுலியூர், பெரும்புலியூர், திருக்கண்ணமங்கை, திருக்கண்ணபுரம், திருத்தலைச்சங்க நாண்மதியம், திருக்கண்ணங்குடி, திருநாகை, திருப்புல்லாணி, திருக்குறுங்குடி, திருவல்லவாழ்நகரம், அழகர் திருமலை, திருக்கோட்டியூர், திருமோகூர். இவர் நம்பெருமாளுக்குச் செய்தருளின கைங்கர்யங்கள் திருமடைப்பள்ளி, திருநடைமாளிகை, ஆலிநாடன் திருமண்டபம், திருக்கொட்டாரம், ஐந்துகளஞ்சியம், இரண்டு திருமதிள், திருக்கோபுரம். இவர்க்கிருப்பிடம் நம்பெருமாள் கோயிலிலே வடதிருக்காவேரி (கொள்ளிடம் என்பர்) தீரத்திலே திருப்பாற்றுறையிலே திருமாளிகை. இவர் நூற்றஞ்சு திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார். இவர் நம்பெருமாள் நியமனத்தினாலே திருக்குறுங்குடியிலே திருநாட்டுக்கெழுந்தருளினார். இவர் நாலு யுகத்திலும் நாலு வர்ணங்களிலும் திருவவதரித்து பகவத் பாகவதாசார்ய கைங்கர்யங்கள் அனேகம் பண்ணியருளினார்.

தனியன்

கலயாமி கலித்வம்ஸம் கவிலோக திவாகரம்
யஸ்ய கோபி: ப்ரகாசாபிராவித்யம் நிஹதம் தம:

பொருள் – கவிஞர்கள் என்னும் உலகத்தில் சூரியனாக திருமங்கையாழ்வார் உள்ளார். இவரது ஒளிக்கதிர்கள் மூலமாக அஜ்ஞானம் காரணமாக உண்டாகும் அக இருள் விலகி ஓடுகிறது. இப்படிப்பட்ட ஆழ்வாரை நான் த்யானிக்கிறேன்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ நம்பிள்ளை திருநக்ஷத்ர சிறப்புப் பகுதி

ஸ்ரீ நம்பிள்ளையின் திருநக்ஷத்ரம் கார்த்திகையில் கார்த்திகை (24.11.2007) ஆகும். அதற்கான சிறப்புப் பகுதியாக பெரியதிருமுடியடைவு என்ற நூலில் இருந்து நம்பிள்ளை பற்றிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன. இவை எளிதான தமிழிலேயே உள்ளதால் மேலும் விளக்கப்படவில்லை.

கோயில் கந்தாடைநாயன் அருளிச்செய்த பெரியதிருமுடியடைவு

நம்பிள்ளைக்குத் திருவவதார ஸ்தலம் சோழமண்டலத்தில் நம்பூர். திருநக்ஷத்ரம் ப்ரபவ வருஷம் கார்த்திகை மாஸம் க்ருத்திகை. குலம் வடமாள். குடி நம்பூர். திருநாமங்கள் வரதராஜன், திருக்கலிகன்றிதாஸர், கலிவைரிதாஸர், ஸூக்திமஹார்ணவர், நம்பிள்ளை, லோகாசார்யர், ஜகதாசார்யர், உலகாசிரியர். தேவியர்கள் ஸ்ரீரங்கநாச்சியாரும் ஆண்டாளும். இருப்பிடம் கோயில். திருவாராதனம் வயலாலிமணவாளர். ஆசார்யர் நஞ்ஜீயர். குமாரர் ராமானுஜாசார்யர். இவர் செய்தருளின க்ரந்தங்கள் நஞ்ஜீயர் செய்தருளின திருவாய்மொழி வ்யாக்யானம் ஒன்பதினாயிரம் உத்தரித்து ஸ்ரீகோசத்திலேயேறியருளப் பண்ணினார். ஆகையாலே நஞ்ஜீயர் திருவுள்ளமுகந்தருளி நம்பிள்ளை என்று இவருக்குத் திருநாமம் சாத்தியருளினார். கந்தாடை தோழப்பர் சாத்தின திருநாமம் உலகாசிரியர். நடுவில் திருவீதிப்பிள்ளை சாத்தின திருநாமம் ஸூக்திமஹார்ணவர். இவர் செய்தருளின க்ரந்தங்கள் திருவிருத்தத்துக்கு ஈடு, கண்ணிநுண்சிறுத்தாம்புக்கு ஈடு, மைவண்ண நறுங்குஞ்சி வ்யாக்யானம், திருப்பல்லாண்டு ஈடு, ஸ்ரீவைஷ்ணவ ப்ரகாரம் முதலான க்ரந்தங்கள்.

தனியன்

வேதாந்த வேத்யாம்ருத வாரிராசேர்
வேதார்த்த ஸாராம்ருத பூரமக்ர்யம்
ஆதாய வர்ஷந்தமஹம் ப்ரபத்யே
காருண்ய பூர்ணம் கலிவைரிதாஸம்

பொருள் – வேதாந்தியாகிய நஞ்ஜீயர் என்னும் அமிர்தக் கடலிலிருந்து, மிகவும் இனிமையானதாக உள்ள வேதப்பொருள் அன்னும் அமிர்தத்தைப் பருகி, அதனைப் பொழிகின்ற மேகமாகிய கலிவைரி தாஸர் என்னும் நம்பிள்ளையை சரணம் புகுந்தேன்.

இவர் நூற்றைந்து திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார். இவர் திருவடிகளிலே ஆச்ரயித்தவர்கள் குமாரரான ராமானுஜாசார்யர், கந்தாடை தோழப்பர், நடுவில் திருவீதிப் பட்டர், பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, வேல்வெட்டிப்பிள்ளை, ஈயுண்ணிமாதவர், பின்பழகிய பெருமாள் ஜீயர், ஏறுதிருவுடையார்தாஸர், ப்ராப்யஸ்தலநிவாஸர், ப்ராப்யஸஹவாஸர், ப்ராப்யகாக்ஷேபர் முதலானவர்கள். ராமானுஜார்யர் செய்தருளின க்ரந்தங்கள் ஸாரார்த்தஸங்க்ரஹம், ரஹஸ்யத்ரயம்.

நம்பிள்ளை திருவடிகளே சரணம்